ஆரம்பம் 1969 பெப்ரவரி
ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

அறிவோம்.. அறிவிப்போம்...



# அன்புடன் உங்களோடு ...

## இன்னுமொரு தபசுகாலம் ....

"எக்காளம் ஊதி எச்சரியுங்கள்; புனிதமான உண்ணா நோன்பிற்கென நாள் குறியுங்கள்" [யோவேல் 2:15]

என்னும் வரிகள் தபசு காலத்தை நோக்கி பயணத்தைத் தொடங்கவும் மீண்டும் தந்தையின் இல்லத்துக்குத் திரும்பிச் செல்லவும் அழைக்கிறது.

இந்த தபசு காலத்தில் என்ன செய்யப் போகின்றோம்? இயேசுவுக்காக ஏதாவது செய்யலாமா? அவருக்காக ஏதாவது செய்தால் பலன் நமக்குக் கிடைக்குமா? முயற்சிதான் செய்து பார்ப்போமே! என்ற மனநிலையோடு தபசு காலத்தை ஆரம்பிப்போம்.

வேதம் சொல்கிறது, "இயேசு தண்டனைத் தீர்ப்புப் பெற்றபோது அவரைக் காட்டிக் கொடுத்தவன் மனம் வருந்திப்போனான்" என்று [மத்தேயு 29:3]. ஆக, இயேசுவின் துன்பமும் வேதனையும் யூதாசைக் கூட மனம் வருந்த வைத்தது. இயேசுவை கண்டபோது அவன் இரண்டு காரியங்களைச் செய்தான்.

ஒன்று, மனம் வருந்தினான்.

இரண்டு காசைத் திருப்பிக் கொடுத்தான்.

– ஏன் அவன் அப்படிச் செய்தான்? இயேசுவுக்கு இப்படியெல்லாம் நடக்கும் என்று அவனுக்குத் தெரியாது. நினைக்கவில்லை. 'இயேசு வல்லமை மிக்கவர், தப்பித்து விடுவார், நான் அவரோடு திரும்பவும் சேரலாம். அவர் என்னை மன்னித்து விடுவார்' என்று நினைத்தான்.

– அவன் நினைத்தபடி நடக்கவில்லை. மனம் வருந்தினான். 'பாவமில்லாதவரை காட்டிக் கொடுத்தேன், எதற்காக இப்படிச் செய்தேன்? பணத்திற்காகத்தானே இப்படிச் செய்தேன்'. எந்த பணத்தின் மேல் ஆசைபட்டுக் காட்டிக் கொடுத்தானோ, "அதையே தூக்கி எறிந்தான்".

– அவன் நினைத்திருப்பான் காசைத் திருப்பிக் கொடுத்தால் இயேசுவை விட்டு விடுவார்கள் என்று. ஆனால், அவனுடைய எண்ணம் போல் நடக்கவில்லை. மாறாக, இயேசு வேதனையோடு, துன்பப் பட்டு இறந்து போனார்.

– தபசு காலம், என்னை நேசிக்கின்ற இயேசு துன்பம், வேதனை, கசையடி, அவமானம் போன்றவற்றை அனுபவித்து கடைசியில் உனக்காக இறந்துபோன நாட்களை நினைவு படுத்துகின்ற காலம். கொஞ்சம் சிந்தித்துப் பார், உனக்காக, உன் குடும்பத்திற்காக இந்த உலகத்தில் உயிரைக் கொடுத்த இயேசுவின் இரத்தம் வடிந்த முகத்தைப் பார்!

இரத்தம் சிந்துகின்ற என் இயேசுவைப் பார்த்து நீ மனம் வருந்த வேண்டும்.


உன் மனமாற்றம் உன் வாழ்வில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முயற்சி செய்.

புதிய வாழ்வை அமைத்துக் கொள்!

இயேசுவுக்காக வாழப் பழகிக் கொள்!

– ஆசிரியர் –





"அவனைச் சிலுவையில் அறையும்" [மாற்கு 15:13]

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - [illegible] பெப்ரவரி

மலர் - 52 இதழ் - 02

மார்ச் - 2020

ஆசிரியர் :

■ அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

■ சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே...

| | |
|---|---|
| அர்த்தமுள்ள தவக்காலத்தை நோக்கி | 02 |
| நக்குண்டார் | 06 |
| அந்த இரவு | 07 |
| மாற்றம் மலர மனதில் | 08 |
| ஏதோ சொல்லணும்னு | 10 |
| தீப்புழு | 12 |
| நற்கருணை ஆண்டிதுவே! | 14 |
| மாணவர் பக்கம் | 15 |
| கடுகுக் கதை | 16 |
| என்னைச் சிறையிலடைத்தார்கள் | 17 |
| தவணை முறையில் ஒரு மரணம் | 18 |
| தமிழ் இனி சாகுமா? | 19 |
| இன மோதல் | 21 |
| திராளா அடம்பன் கொடிகள் | 22 |
| வாழ்க்கையை இழந்து | 23 |
| வியாகுலப் பிரசங்கங்கள் | 24 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| போட்டி முடிவுகள் | 27 |
| திருவிவிலியம் கற்போம் | 28 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=
(தபாற் செலவு உட்பட)

# அர்த்தமுள்ள தவக்காலத்தை நோக்கி ...



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

இன்றுமொரு தவக்காலத்தை தொடங்குகிறோம். மீளாய்வு இன்றி முழுமையான வளர்ச்சி அடைய முடியாது. தவக்கால முயற்சிகளின் நோக்கம் என்ன? அவை எமது வாழ்வின் இலக்கை அடைய உதவுகின்றனவா....? "மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என நெற்றியில் சாம்பலைப் பூசுவதன் மூலம் தவக்காலம் தொடங்குகின்றது. தவக்காலத்தில் பலர் ஞாயிறு திருப்பலிக்குச் செல்வதை தவறாமல் அனுசரிப்பார்கள்.

பலர் மாமிசத் தவிர்ப்பு உணவு வகைகளையே உண்பர். பலர் மது அருந்துதல், புகைத்தல் ஆகியவற்றையும் தவிர்த்துக் கொள்வர். வேறு சிலர் வெள்ளிக்கிழமைகளில் உண்ணா நோன்பைக் கடைப்பிடிப்பர். பெரும்பாலான கத்தோலிக்கர், தவக்காலத்தில் தினமும் சிலுவைப்பாதை செய்தல், குடும்ப செபமாலை சொல்லுதல் ஆகிய பக்தி முயற்சிகளில் ஈடுபடுவர்.

தவக்காலம் எம்மை 'மனம் மாற' அழைக்கிறது. 'மெட்டநோயா' *(Metanoia)* என்பதன் அர்த்தம் வாழ்வை வேறோரு விதமாகப் பார்ப்பது; அதுவே மனமாற்றம். நாம் நம்முடைய வாழ்வைத் திட்டமிடுகிறோம். சில சமயங்களில் பிறருடைய வாழ்வையும் திட்டமிட விரும்புகிறோம். மனமாற்றம் என்பது, எமது வாழ்வைக் கடவுள் பார்க்கும் விதத்தில் பார்ப்பது. ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது: "அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே..... மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்" என்கிறார் (1 சாமு 16:7). கடவுளுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதே தவக்காலத்தில் எமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும், எமது வாழ்வின் முக்கிய அக்கறையாக அமைய வேண்டும். இதனைத்தான் எமது செபத்தில் கேட்கின்றோம்.

"உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக!" (மத் 6:10). கடவுள் தம் மகன் இயேசு வழியாக தம் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். இயேசு ஒரேயொரு கட்டளையைத் தந்திருக்கின்றார்: "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" (யோவா 15:12). கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சம் அதுவேதான். எனவே, எமது தவக்கால முயற்சிகளான - திருவிருந்து, பக்தி முயற்சிகள், தவம் போன்றவை அயலவர் மேல் உள்ள, விசேடமாக ஏழைகள் மேல் உள்ள அக்கறை மட்டில் முனைப்பாக இருக்க வேண்டும்.

**வரலாற்றில் தவக்காலம் :**

திரு அவை வரலாற்றில் தவக்காலத்தின் பல்வேறு கூறுகள் எப்படி வளர்ச்சிப் பெற்றன எனப் பார்ப்போம். கி.பி. முதல் நூற்றாண்டில் நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இறந்து, உயிர்த்து, விண்ணகம் சென்ற பிறகு, திருத்தூதர்களின் போதனைகளால் எருசலேமிலும் உலகின் மற்ற இடங்களிலும் திரு அவை விரைவாக வளர்ச்சியடைந்தது. இயேசுக்கிறிஸ்து


வாரத்தின் முதல் நாளில் (அதாவது, ஞாயிற்றுக்கிழமையன்று) உயிர்த்தெழுந்ததால், யூதர்களின் ஓய்வு நாளான சனிக்கிழமையை விடவும் தொடக்ககால கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையை முக்கியமானதாகக் கருதினர். ஒவ்வொரு ஞாயிறும் அவர்களுக்கு உயிர்ப்புப் பெருவிழா கொண்டாட்டமாகவே திகழ்ந்தது.

இயேசுவின் இரண்டாம் வருகையை விரைவில் எதிர்பார்த்துக் காத்திருந்த முதல் கிறிஸ்தவர்கள், ஒரு குழுமமாக இணைந்து அப்பம் பிடுவதிலும், இறைபுகழ் கூறுவதிலும், உடைமைகளைப் பகிர்ந்து வாழ்வதிலும் மட்டுமே கவனம் செலுத்தி வந்தனர். கிறிஸ்துவின் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகளைத் தனிப்பட்ட விழாக்களாகக் கொண்டாடும் எண்ணம் எதுவும் அவர்கள் உள்ளங்களில் எழவில்லை. இயேசுவின் போதனைகளைப் பின்பற்றி சான்று வாழ்வு வாழ்வதும் அவருக்காக உயிரைக் கொடுப்பதுமே அவரகளது இலட்சியமாக இருந்தன.

இயேசு கிறிஸ்துவின் இறப்பையும், உயிர்ப்பையும் ஆண்டுக்கு ஒரு முறை யூதர்களின் பாஸ்கா விழாவையொட்டி சிறப்பாக நினைவுகூரும் வழக்கம் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவானது. புதிதாக நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்களுக்கு உயிர்ப்புப் பெருவிழாவன்று திருமுழுக்கு வழங்கும் முறையும் அக்காலத்தில் தோன்றியது. புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாள்களில், கிறிஸ்தவர்கள் 40 மணிநேரம் நோன்பிருந்து, துக்கம் கடைப்பிடித்தனர்.

மூன்றாம் நூற்றாண்டிலும் இரண்டு நாட்கள் முழுமையாக நோன்பிருக்கும் வழக்கம் தொடர்ந்தது. பாஸ்கா திருவிழிப்பு வழிபாட்டில் புனித எண்ணெய்களை மந்திரிக்கும் வழக்கமும் இருந்தது. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரோமைப் பேரரசர் கொன்ஸ்தாந்தின் கிறிஸ்தவ சமயத்துக்கு அரச அங்கீகாரம் அளித்தார். அதன் பின் 325ம் ஆண்டு நிசேயா நகரில் கூடிய திரு அவையின் முதல் பொதுச்சங்கம் இயேசுக் கிறிஸ்து நாற்பது நாள்கள் நோன்பிருந்ததைச் சுட்டிக்காட்டி கிறிஸ்தவர்கள் அனைவரும் உயிர்ப்புப் பெருவிழாவிற்கு முன்பு நாற்பது நாள்களைத் தயாரிப்புக் காலமாக ஏற்று நோன்பிருக்க வேண்டுமென வலியுறுத்தியது. இதையடுத்து மேற்கத்திய திரு அவையில் 36 நோன்பு நாள்களை உள்ளடக்கிய 6 வாரங்களைத் தவக்காலமாகக் கடைப்பிடிக்கும் வழக்கம் உருவானது.

உரோமைப் பேரரசர் கொன்ஸ்தாந்தீனது தாய் ஹெலேனா, இயேசுக்கிறிஸ்து அறையப்பட்ட உண்மைச் சிலுவையை கி.பி. 326 செப்டம்பர் 14ம் திகதி எருசலேமில் கண்டுபிடித்தார். அதையடுத்து திருச்சிலுவையைத் தரிசித்து வணக்கம் செலுத்துவதற்காக ஏராளமான கிறிஸ்தவர்கள் எருசலேம் நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்டனர். கி.பி. 336ம் ஆண்டு, இயேசுவின் திருக்கல்லறை ஆலயம் நேர்ந்தளிக்கப்பட்டு, கிறிஸ்துவின் திருச்சிலுவையும் அங்கு நிறுவப்பட்டது. புனித வாரத்தில் எருசலேம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் இயேசுவின் திருப்பாடுகளைத் திருப்பயணிகளுக்கு நாடகமாக நடித்துக் காட்டும் வழக்கம் உருவானது.



நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறைச்சி, திராட்சை இரசம் போன்றவற்றை நோன்பு நாள்களில் தவிர்க்கும் விதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. நோன்பு காலத்தில் அதிக நேரம் செபத்தில் செலவிடுவதை கிறிஸ்தவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தவக்காலத்தில் "அல்லேலூயா" கீதம் பாடுவதைத் தவிர்க்கும் நடைமுறையும் தோன்றியது. கி.பி. 395ம் ஆண்டளவில் புனித வாரத்தின் முதல் நாளன்று ஒலிவ மலையில் இருந்து எருசலேம் நோக்கி கிறிஸ்தவர்கள் குருத்தோலை பவனி நடத்தியதாக எத்தேரியா என்ற ஒரு எருசலேம் திருப்பயணி குறிப்பு எழுதி வைத்துள்ளார்.



புனித வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடுகள் நான்காம் நூற்றாண்டிலேயே தோன்றி வளர்ந்துள் என. மெசியாவின் துன்பம் குறித்த திருப்பாடல்கள், இயேசுவின் பாடுகள் குறித்த வாசகங்கள் ஆகிய வற்றை மையப்படுத்திய இறைவாக்கு வழிபாட்டில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கும் வழக்கம் உருவானது. அத்துடன் புனித வெள்ளியன்று சிலுவையை முத்தமிட்டு வணங்கும் வழக்கம் தோன்றியது.

ஐந்தாம் நூற்றாண்டில் உள்ளம் சார்ந்த நோன்பு அதிகமாக வலியுறுத்தப்பட்டது. "நோன்பு நமது ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகின்றது. உள்ளத்துக்கு எழுச்சியூட்டுகின்றது. உடலை ஆவிக்குரியதாக மாற்றுகின்றது" என்று இறையிய லாளர் புனித அகுஸ்தினார் சுட்டிக் காட்டுகின்றார் (354 - 430).

### ஆறாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரை :

புனித வாரத்தின் முதல் நாளுக்கு 'குருத்து ஞாயிறு' என்ற பெயர் ஸ்பெயின் நாட்டில் தோன்றி யது. புனித வியாழனன்று திருத்தைல திருப்பலி நிகழ்த்தி, புனித எண்ணெய்களை மந்திரிக்கும் வழக்கமும் அதே நூற்றாண்டிலேயே உருவானதாக அறிகின்றோம். புனித வெள்ளியன்று இறை மக்கள் மன்றாட்டுக்குப் பிறகு திருப்பணியாளர் மட்டும் நற்கருணை உட்கொள்ளும் நடைமுறை



கிறிஸ்தவம்

## மாணவர் பக்கம்

**பெப்ரவரி மாத விடைகள்**

| | | |
|---|---|---|
| 1) 3 | 5) 5 | 9) 1 |
| 2) 4 | 6) 2 | 10) 4 |
| 3) 3 | 7) 1 | 11) 2 |
| 4) 5 | 8) 4 | |

உருவானது. புனித வியாழனன்று ஒரு சில இடங்களில் மட்டும் நடைபெற்று வந்த பாதம் கழுவும் சடங்கை கி.பி. 698ம் ஆண்டு நடைபெற்ற தொலேதோ சங்கம் திரு அவை முழுவதற்கும் விரிவுபடுத்தியது.

எட்டாம் நூற்றாண்டின் பாதியில் குருத்தோலைப் பவனிக்கு முன்பு குருத்தோலைகளை மந்திரிக்கும் வழக்கம் உருவானது. கி.பி. 691ல் திருத்தந்தை இரண்டாம் உர்பான், கிறிஸ்தவர்கள் அனைவருமே தவக்காலத்தை சாம்பல் பூசி தொடங்கும் வழக் கத்தை உருவாக்கினார். இவ்வாறு தவக்காலத்தின் முதல் நாள், 'திருநீற்றுப் புதன்' என்ற பெய ரைப் பெற்றது. 12ம் நூற்றாண்டில் பழைய குருத் தோலைகளில் இருந்து சாம்பல் தயாரித்துப் பயன்படுத்தும் வழக்கம் உருவானது. இயேசுவின் திருப்பாடுகளை 14 நிலைகளில் தியானித்து செபிக்கும் மரபு சார்ந்த சிலுவைப்பாதை பக்தி முயற்சியை 1217ல் அசிசி நகர் பிரான்சிஸ் தொடங்கி வைத்தார். சிலுவைப் போர்களின் காலத்தில் இஸ்லாமியரின் பிடியில் இருந்த புனித பூமியை மீட்பதற்கான ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இந்தப் பக்தி கிறிஸ்தவர்க ளிடையே வேகமாகப் பரப்பப்பட்டது. பின்னர் தவக்கால பக்தி முயற்சிகளில் முக்கிய இடத்தையும் இது பிடித்துக்கொண்டது.

தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் அதிக தர்மச் செயல்களில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டனர். கத்தோலிக்கத் திருச்சபையின் மாபெரும் இறையியலாளரான புனித தோமஸ் அக்குவி னாஸ், "பாவத்துக்காக வருந்துகிற உள்ளத்

தையும், தாழ்ச்சியையும் (தவக்கால) நோன்பு வழங்குகின்றது. சிற்றின்ப ஆசைகளின் மோகங்களைச் சிதறடித்து, உடலிச்சையின் நெருப்பை அணைத்து, கற்பின் உண்மை ஒளியை அது சுடர் விடச் செய்கிறது" என்று கூறுகிறார்.

திரித்தெந்து பொதுச்சங்கத்திற்குப் பிறகு 1510ல், திருத்தந்தை ஐந்தாம் பயஸ் வெளியிட்ட உரோமை திருப்பலி நூல், புனித வியாழன் திருப்பலியில் மறையுரையைத் தொடர்ந்து பாதம் கழுவும் சடங்கை நடத்துமாறு பணித்தது. ஒரு சந்தி மற்றும் சுத்த போசன நாள்கள் தவிர மற்ற நாள்களில் இறைச்சி உண்ணலாம் எனவும் அனுமதிக்கப்பட்டது.


1955ஆம் ஆண்டு திருத்தந்தை 12ம் பயஸ் தவக்கால வழிபாட்டு முறையில் சில மாற்றங்களை அறிமுகம் செய்தார். அதன்படி புனித வியாழன் திருப்பலியில் மறையுரையைத் தொடர்ந்து 'பாதம் கழுவும் சடங்கு' இடம்பெறத் தொடங்கியது. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பின்னர் புனித வியாழன் மாலை முதல் உயிர்ப்புப் பெருவிழா மாலை வரையிலான காலமே பாஸ்கா முந்நாள்கள் என்ற புரிதல் ஏற்பட்டது.

**சிந்தனைக்கு ....**

ஆகவே, தவக்காலம் என்பது உடலை வருத்திக் கொள்கின்ற காலமன்று உள்ளத்தைத் திருத்திக்கொள்ளும் காலம் என்பதை உணர நாம் அழைக்கப்படுகின்றோம். நமது பாவப் பழக்கங்களைக் களைந்துவிட்டு, புதிய மனிதராக மாறுவதற்கான வாய்ப்பை தவக்காலத்தின் வழியாகத் திரு அவை நமக்கு வழங்குகின்றது. தவக்கால ஒழுங்குகளையும், பக்தி முயற்சிகளையும் வாடிக்கையான ஒன்றாகக் கருதாமல், கடவுளுக்கும் நமக்கும் நடுவிலுள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான முயற்சிகளாக உணர்ந்து நாம் மனம் மாற்றம் பெற வேண்டும்.

"தவக்காலம் என்பது தன் மறுப்புக்கும் உகந்த காலம். நமது ஏழ்மையால் மற்றவருக்கு உதவவும் பிறரை மேம்படுத்தவும் நாம் எதை இழக்க முடியுமென்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். மெய்யான ஏழ்மை நம்மைக் காயப்படுத்தும் என்பதை நாம் மறக்கக்கூடாது. தவம் என்ற பரிமாணத்தைக் கொண்டிராத எந்த தன் மறுப்பும் மெய்யானதன்று. விலை கொடாத மற்றும் காயப்படாத பிறரன்பில் எனக்கு நம்பிக்கையில்லை" என்று நம் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார்.

தவக்காலம் நம்மில் ஏற்படுத்துகின்ற மாற்றம் பிறரன்பில் வெளிப்பட வேண்டும் என்பதே நமது திருத்தந்தையின் அழைப்பு. "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா 15:13) என்று கற்பித்த இயேசுவின் அன்பை நமது வாழ்வில் செயற்படுத்த இந்தத் தவக்காலம் அழைக்கிறது. தவக்காலத்தின் புனித நாள்கள் கடவுளுடனும், பிறருடனும் நமது உறவைச் சிறப்பிக்க உதவுபவையாக அமையட்டும். ■




***பெரிய மனிதர்கள் எளிமையானவர்கள் ...***

டாடா நிறுவனங்களில் ஒன்றாகிய நெல்கோவின் சீரமைப்புக்காக நாசிக் நோக்கி முதுநிலை மேலாளர்களுடன் காரில் சென்றுகொண்டிருந்தார் ரத்தன் டாடா. வழியில் காரின் சக்கரம் பழுதடைந்தது. இந்தச் சிறு நிறுத்தம் மேலாளர்களுக்குத் தேவையாக இருந்தது. சோம்பல் முறித்து, பேசிச் சிரித்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தவர்கள் ரத்தன் டாடா உடனில்லாததனை உணர்ந்து அங்குமிங்கும் தேடினார்கள். தேநீர் பருகப் போனாரா அல்லது ஓய்வெடுக்கப் போனாரா? என்றெல்லாம் யோசித்தவேளை, ஓட்டுனர் அருகே சாலையில் மண்டியிட்டு சக்கரத்தை மாற்ற உதவிக்கொண்டிருந்தார் ரத்தன் டாடா. நெற்றியில் வியர்வை.... இதழ்களில் புன்னகை .... நெஞ்சில் மனிதம்! பெரிய மனிதர்கள் எளிமையானவர்கள். ஒவ்வொரு விதத்திலும் முழுமையானவர்கள்.

- ஜே.எம்.இரத்தினராஜா -



# நக்குண்டார் ...



கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

நீண்ட நாள் அகதிமுகாம் வாழ்க்கையை முடித்தவர்களாக, தமது சொந்தக் கிராமமான, கண்ணன் கிராமத்தில் மீளக் குடியமர்விற்காக மக்கள் சென்றுகொண்டிருந்தனர். சிங்காரம், தனது மனைவி மற்றும் இரண்டு பெண் பிள்ளைகளுடன் சென்றுகொண்டிருந்தான். அவர்கள் வளர்த்த வெள்ளையன் என்னும் வெள்ளை நிறமான சடை நாய் அந்த பாதுகாப்பு படையினர் முகாமின் வாசலில் நின்றுகொண்டிருந்தது.

சிங்காரம் ஒரு நாள் முல்லைத்தீவு நகருக்குச் சென்றுகொண்டிருந்தான். அப்போது, புனித மரியாள் மாதாவின் ஆலய வளவில் நின்றிருந்த, தென்னைமர நிழலில் சுருண்டு படுத்தபடி அந்த வீதியால் சென்று வருவோரைப் பார்த்து, தனது வாலை ஆட்டியபடி இருந்தது ஒரு நாய்க்குட்டி. பஞ்சு போன்ற வெள்ளை நிறமான அடர்த்தியான உரோமத்தைக் கொண்டிருந்தது. குறுகுறுத்த கண்கள். அதன் வடிவைக் கண்டதும் சிங்காரம் அதனருகே சென்று,

"உஞ்சு! உஞ்சு! குட்டி! குட்டி!"

என்றதும், சிங்காரத்தைப் பார்த்த மாத்திரத்தில் எழுந்து ஓடி வந்து, சிங்காரத்தின் கால்களைச் சுற்றி வட்டமிட்டபடியும், அனுங்கியபடியும் வாலாட்டி நின்றது. அது ஆணா? பெண்ணா? என அறிந்துகொள்ள, அதன் பின்னங்கால் இரண்டினையும் அகட்டியபடி வயிற்றுப் பகுதியைப் பார்த்தான், சிங்காரத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆண் குட்டி என அறிந்துகொண்டான்.

நாய்க்குட்டியினை எடுத்து, ஒரு கையால் அணைத்தபடி, தனது வீட்டு வாசலுக்குச் சென்றது தான் தாமதம், வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த கௌதமி,

"அம்மா....! அம்மோவ்....! திவ்வியா அக்காச்சி இஞ்ச பாருடி! அப்பா கொண்டுவந்த நாய்க்குட்டிய! என்ன வடிவப்பாயிது! பஞ்சு போல ஐயோ சடக்குட்டி"

என்றபடி, நாய்க்குட்டியை தனது தந்தையிடமிருந்து குழந்தைகளை வாரித் தூக்குவதுபோலத் தூக்கி தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

திவ்வியா அதன் முகத்தைத் தடவியபடி,

"கௌதமி இதுக்கு வெள்ளையன் எண்டு பேர் வைப்பம் ......"

"அப்பா கொஞ்சம் பொறுங்கப்பா...."

என்றபடி ஓடிச்சென்றவள் பசுப்பாலை, ஒரு சிறிய தட்டில் ஊற்றிக்கொண்டு வந்து வெள்ளையனுக்கு கொடுத்தனர். பாலைக் குடித்தது.

"இஞ்ச பாருடி அக்காச்சி வெள்ளையன்! வெள்ளைக் காரன்தான், ஆளப்பாருங்களன்" என்றாள் கௌதமி.

நாளடைவில், வெள்ளையன் நன்றாக வளர்ச்சியடைந்தது. திவ்வியா தனது சகோதரி கௌதமியுடன், பக்கத்திலுள்ள பாடசாலைக்குச் செல்லும்போது, அவர்களை வெள்ளையன் கூட்டிச் சென்று விட்டு விட்டு வந்த பின்னர், பாடசாலை முடிவடையும் நேரத்துக்கு மீண்டும் சென்று அவர்களைக் கூட்டிக் கொண்டு வரும். அந்த அளவிற்கு அவர்களுடன் ஐக்கியமாகி நன்றி உணர்வோடு, வீட்டுப் பற்றுடன் வளர்ந்தது.

ஒரு நாள், சிங்காரத்தின் வீட்டில் மதிய உணவிற்கு அரிசியில்லாமல் போனது. அன்று தமது வீட்டுத் தோட்டத்தில் இருந்த மரவள்ளிக் கிழங்கினைப் பிடுங்கி அவித்து, அன்றைய உணவை உண்ண இருக்கையில் கௌதமி அழுதாள், 'வெள்ளையனுக்கு என்னசெய்வது...? அவன் கிழங்கினைச் சாப்பிட மாட்டான்' என கௌதமி மன வேதனை அடைந்தாள்.

உடனே பக்கத்து வீட்டிற்குச் சென்று மரை

இறைச்சிக் கறியுடன், ஒரு தட்டில் சோற்றினை வாங்கிக் கொண்டு கொடுத்தாள்.

வெள்ளையன் அதனை உண்ணவில்லை. கௌதமி யின் காலடியில் போய்ப் படுத்துக் கொண்டது!

"இஞ்ச பாருங்களன் ....! வெள்ளையனுக்கு வந்த ரோஷத்த....! ரோஷமெண்டா இப்பிடித்தான் இரிக்கோணும்"

தனது மனைவி வெள்ளையனைப் பார்த்துக் கூறியது அத்தனையும் உண்மை என அறிந்துகொண்ட சிங்காரம், இந்த வளர்ப்புப் பிராணியிடமிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிந்ததென நினைத்துக்கொண்டான்.

அன்றிரவு அனைவரும் உணவு உட்கொண்டனர். இரவுத் தூக்கம் அவ்வீட்டில் புகுந்து கொண்டது.

வெள்ளையன் வீட்டுத் தோட்டத்தில் நடப்பட்டிருந்த மரவள்ளிச் செடிகளின் கிழங்குகளை தின்பதற்காக வந்த காட்டுப் பன்றிக் கூட்டத்தை விரசி, விரசிக் கலைத்துவிட்டு, மீண்டும் தயார் நிலையில் வந்து நின்றது. சிங்காரமும் இதை அவதானித்தபடி, வீட்டுத் தாழ்வாரத்தில் பாயினைப் போட்டுப் படுத்திருந்தான்.

அருகே நன்றாய்க் காய்ந்த வீர மர விறகுகளைப் போட்டு நெருப்பினைப் பற்ற வைத்திருந்தான். கடுமையான பனி விழுந்தது. அந்த நெருப்பின் கண கணப்பில் சிங்காரம் அயர்ந்து தூங்கிவிட்டான்.

ஏறக்குறைய நடுச்சாம வேளை! ஊமத்தங் கோழிப் பறவை முக்கியபடி சத்தமிட்டது. குழலியான் குருவியும் தனக்குரிய பாணியில் அகத்தியது.

இப்போது, வெள்ளையனின் வித்தியாசமான குரலைச் சத்தம் பலமாக இருந்தது. சிங்காரம் கண்விழித்து எழுந்து, அரவம் காட்டாமல் காதினைக் கூர்மையாக கேட்பதற்காக, தனது தலையினை மூடிப் போர்த்திருந்த அந்த துவாயை விலக்கி விட்டு, காது கொடுத்துக் கேட்டான். அவனது வீட்டு வாசலுக்கு முன்பாக வாசலைக் கடந்து சப்பாத்தணிந்தோர் நடந்து போகும் சத்தம் கேட்டது.

வித்தியாசமானவர்கள் செல்வதனை தனது மோப்ப சக்தியால் உணர்ந்த வெள்ளையன், வாய் ஓயாமல் குரைத்தது. சிங்காரம் ஏதோ அசம்பாவிதம் நடைபெறப் போகின்றதென அசையாமல் படுத்திருந்தான்.

சற்று நேரத்தில் அக்கிராமத்தில் அமைந்திருந்த பாதுகாப்புப் படையினரின் முகாமிலிருந்து, சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஓய்ந்தன.

மறுநாள் காலையில், அந்த கண்ணன் கிராம மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை. மக்கள் விரைவாக வெளியேறிக்கொண்டிருந்தனர்.

**– தொடரும் ........**

# அந்த இரவு!



அந்த இரவின் கும்மிருட்டில்
தட்டுத்தடுமாறி
ஓர் அறைக்குள் நுழைகின்றேன்...
அந்த அறையின் இருள் என்னை
பயமாக சூழ்கின்றது...
ஏதோ அந்த அறைக்குள் இருக்கக்கூடும்
என ஊகித்து மெல்ல நடக்கிறேன்...
யாரோ கதைப்பதும் சிரிப்பதும்
என் காதில் விழுகின்றது.
திடுக்கிட்டுப் போகின்றேன்.
அவர்களை மிதித்து விடக் கூடாது
பயத்தில் விலகி தடுமாறி நடக்கின்றேன்.
அவர்கள் என்னை பார்க்கின்றார்களோ!
யாராக இருக்கக்கூடும்...?
புரியவில்லை ...
எல்லாம் தெளிவில்லாமல் நகர்கின்றன...
குரல்களை வைத்து
முகங்களுக்கு உயிர்கொடுத்து
அவற்றைப் பார்க்க முயல்கின்றேன்.
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
அசைந்து அசைந்து
காற்றில் கரைந்து போகின்றன.
அறையை விட்டு உடனே
விலகிவிட நினைத்து
வேகமாக ஓடுகின்றேன் ...
ஆனால் அது முடிவிலியாய்
நீண்டு என்னை உள்ளிழுத்துக் கொள்கின்றது.
இது கனவு முடித்துக் கொள்
என்று என் மூளை கட்டளை இடுகின்றது.
என்னால் முடியவில்லை
மூளை என் காலை
வேகமாக உயர்த்திப் போடுகின்றது ...
திடுக்கிட்டு எழுந்து மூச்சு வாங்கிக்
கொள்கிறேன்.....

- சங்கரி ஷிவா -



# மாற்றம் மலர மனதில் வழிவிடுவோம்

ஜே. எச். இரத்தினராஜா

மனமாற்றம் நிகழ்ந்தால்தான் வாழ்வில் முன்னேற்றம் நிகழும். மாற்றமே முன்னேற்றத்திற்கு முதல்படி. ஒரு விதை விதையாகவே உள்ளது. எந்தவித மாற்றமும் இல்லை என்றால் அது செடியாக வளராது என்பது எவ்வளவு உண்மையோ. இதுவும் அவ்வளவு உண்மை.

இரு விதமான மாற்றங்கள் நம்மில் நிகழ்கின்றன. ஒன்று உடல் ரீதியான மாற்றம். அடுத்தது மனரீதியான மாற்றம். உடல் ரீதியான மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே உள்ளது. இம் மாற்றம் நமது கட்டுப்பாட்டில் அவ்வளவாக இல்லை. ஆனால், மன ரீதியான மாற்றம் முழுமையாக நமது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. மேலும், நாம் நினைத்தால்தான் மன ரீதியான மாற்றத்தை நிகழ்த்த முடியும்.

மனதில் மாற்றம் ஏற்படுவதற்கு நீங்கள் சிறந்த கருத்துக்களை மனதில் தூவிக்கொண்டே இருக்க வேண்டும். எவ்வாறு நிலத்தில் புதைந்த விதை ஈரம் கிடைத்ததும் முளைத்து விடுகிறதோ அதுபோல மனதில் விழுந்த கருத்தும் அதற்கென உரிய நேரம்வரும்போது விழித்து விடுகிறது. அவ்வாறு மனம் விழிக்கும்போது மனமாறுதல்கள் நிகழ்கின்றன.

மேலும், அவை உங்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாகவும் மாறிவிடுகிறது. ஏனென்றால், மனதில் தோன்றும் கருத்துக்களின் வெளிப்பாடே வாழ்க்கை.

நல்ல கருத்துக்களின் விளைநிலமாக உங்கள் மனம் விளங்கும்போது வளமான வாழ்க்கை தன்னிச்சையாகவே மலர்ந்து விடுகிறது. மனமாற்றமே வெற்றிக்கு விதை. மேலும், புதிய மாற்றங்களைத் தோற்றுவிப்பவராகவும், புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்பவராகவும் நீங்கள் விளங்க வேண்டும்.

**புதிய கருத்துக்களை உள்வாங்குங்கள்**

உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாக இல்லாமல் புதிய கருத்துக்களுக்கும் செவி கொடுங்கள். பழைய கருத்துக்களில் உங்களுக்கு நம்பிக்கையும், பிடிப்பும் இருப்பதால் தவறில்லை. என்றாலும், புதிய கருத்துக்களுக்கு வழிவிடுங்கள்.

புதிய நீர் ஊறிக்கொண்டே இருப்பதால்தான் நதி நகர்ந்துகொண்டே இருக்கின்றது. அவ்வாறு புதிய நீர் உற்பத்தியாகவில்லையென்றால், நதி ஏது? கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். ஆகவே, ஆயிரமாயிரம் கருத்து மலர்கள் மலரும் பூஞ் சோலையாக உங்கள் மனம் மாறட்டும். அதில் பல்வேறு மாறுதல்கள் மலரட்டும்.

மாறுதல்கள் மலர்வது உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாகவும், செயலுக்கு வேகம் கொடுப்பதாகவும் இருக்கவேண்டும். உங்கள் இயக்கத்தை முடக்கி விடுவதாக மாறுதல்கள் இருந்து விடக்கூடாது. ஆகவே, மாற்றம் ஆக்கமாக மலரட்டும்.

**கருத்துக் கருவூலம்**

பல்வேறு நூல்களைப் படிப்பதாலும், அறிஞர்களின் உரைகளைக் கேட்பதாலும் புதிய கருத்துக்களை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு புதிய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும்போது அவற்றை அப்படியே உள்வாங்கிக்கொள்ளக்கூடாது.

மாறாக, புதிய கருத்துக்களுக்கும், ஏற்கனவே உங்களிடம் உள்ள கருத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமை ஆகியவற்றை அலசி ஆராய்ந்து பாருங்கள். மேலும், புதிய கருத்துக்கள் உங்கள் இலட்சியத்தை அடைவதற்கு எந்த அளவுக்கு உபயோகமாகவும், உறுதுணை யாகவும் இருக்கும் எனவும் எண்ணிப்பாருங்கள்.

பிறகு புதிய கருத்துக்களின் செயலாக்கம் உங்களுக்கு உதவுமாயின் அவற்றைக் கடைப் பிடியுங்கள். அவ்வாறு இல்லையெனில் அக் கருத்துக்களைத் தள்ளிவிட்டு ஏற்கனவே நீங்கள் கொண்டுள்ள கருத்துக்கள் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுங்கள்.

**மனம் திறக்கட்டும்**

எப்பொழுதும் புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள உங்கள் மனம் திறந்த நிலையிலேயே இருக்கட்டும். நமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று எண்ணுவதால் மனம் இறுக்க நிலைக்கு சென்றுவிடுகிறது. அதனால் முன்னேற்றம் தடைப்படுகிறது.

ஆகவே, புத்தம் புதிய கருத்துக்கள், மாற்றுக் கருத்துக்கள் என எத்தகைய மாற்றத்தையும் உள் வாங்கிக் கொள்ளும் உயர்ந்த நிலையில் உங்கள் மனம் மலர்ந்திருக்கவேண்டும்.

மாற்றம் மலர்ந்தால் புதிய மார்க்கம் தென்படும். ஆகவே, தற்பொழுது நீங்கள் வாழும் வாழ்க்கை முறையை. செயல் முறையை, பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். மேலும், இது இப்படித்தான் இருக்க வேண்டும். அது அப்படித்தான் இருக்கவேண்டும் என்னும் எதிர்பார்ப்புக்களோடு எதையும் அணுகக் கூடாது. அவை எப்படி உள்ளதோ அதற்குத் தக்கவாறு அவற்றை அணுகி உங்கள் இலட்சி யத்தை அடைவதற்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளவேண்டும்.

**புதியன விரும்புவோம்.**

நீங்கள் உண்ணும் உணவில், உடுக்கும் உடையில் அவ்வப்போது மாறுதல்களைச் செய்யுங் கள். எனக்கு இதுதான் பிடிக்கும், இது பிடிக்காது என்ற மனநிலையிலிருந்து விடுபட்டு எனக்கு எதுவும் பிடிக்கும் எதன் சுவையையும் நான் விரும்புவேன் என புதுப்புது உணவு வகைகளையும், உடை வகைகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் உங்கள் அறையில் மாறுதல்களை அவ்வப்போது செய்யுங்கள். அதாவது, பொருட்க ளின் இடத்தை மாற்றுங்கள். இவ்வாறு செய்தால் மனம் மாறுதல்களைத் தாங்கும் வலிமையையும், மாறுதல்களைத் தோற்றுவிக்கும் வல்வமையையும் பெறுகின்றது.

மனதில் மாற்றம் நிகழும்போது சிந்தனையில் மாற்றம் மலர்கிறது. சிந்தனை மாறும்போது செயலும், வாழ்க்கை முறையும் மாறுதல்களைச் சந்திக்கிறது. இத்தகைய மாற்றமே முன்னேற்றத்தின் முகாந்திரமாக அமைந்து விடுகிறது.

மேலும். மாற்றத்தைத் தோற்றுவிக்கும் ஆக்க சிந்தனையின் உறைவிடமாக உங்கள் மனம் திகழும்போது எந்தப் பிரச்சினையையும் சந்தித்துத் தீர்க்கும் ஆற்றல் உங்களுக்கு வருகிறது.

ஆகவே, மாற்றம் மலர்வதற்கு மனதில் வழி விடுங்கள். ■




– உண்மையான செபம் உனக்காக செபிப்பதல்ல; மாறாக மற்றவர்களுக்காக மன்றாடுவது.

– நீ உண்மைக் கிறிஸ்தவனாக மற்றவர்களுக்காக மன்றாடப் பழகிக்கொள்!

– சிறார்கள் தாராள மனதுடன் வாழ அவர்களுக்கு உதவி செய்யுங்கள். வாழ்வில் நல்லது செய்து மகிழ்வாக ஆடிப்பாடி கொண்டாடுங்கள்.



# ஏதோ சொல்லணும்னு தோணிச்சு!! 06



அருட்பணி. P. ரமேஷ் கிறிஸ்டி

ஒருவருடைய பேச்சை வைத்துக்கொண்டு அவருடைய குணத்தை (*Character*) தீர்மானித்து விடலாம் ....

ஒருவர் சுத்தமானவரா என்பதை அவருடைய ஆடையை வைத்து முடிவு செய்துவிடாதீர்கள். எப்போதும் பெண்களானாலும் சரி, ஆண்களா னாலும் சரி மொத்த சுத்தமும் அவர்களது பின்னங் கால்களில்தான் இருக்கின்றது. ஒருவர் சுத்தமான வரா என்பதை அறிய அவரது காலைப் பார்த் தாலே தெரிந்துவிடும். அதுபோலத்தான் ஒருவர் வாழ்க்கையில் எவ்வளவு உயரத்துக்குப் போனா லும் அவரது பேச்சுதான் அவரை அந்த இடத்தி லேயே வைத்திருக்கும். இல்லை அதையும் தாண்டிய உயரத்திற்குக் கொண்டு போகும். இதுதான் எத்தனையோபேர் எவ்வளவு திறமை இருந்தும் முன்னுக்கு வராததற்குக் காரணம்.

உண்மையான திறமை என்பது என்ன தெரியுமா? நாம் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் பணிவோடு நடந்துகொள்ள வேண்டும். சிலபேரைப் பார்க்கும்போது, நன்றாகப் படித்திருப்பார்கள், ஆனால் வாழ்க்கையில் அடிக்கடி கெட்டபேரே எடுத்துக்கொண்டு இருப்பார்கள். காரணம், அவர்களுடைய வாய்ப் பேச்சுதான்; அதுவே அவர்களுக்கு எதிரியாகும்.

சிலருக்கு எப்போது பார்த்தாலும் எதைப் பற்றியாவது, யாரைப்பற்றியாவது பேசிக்கொண்டே தான் இருக்கவேண்டும். அவர்கள் பேசிப் பேசியே வாழ்க்கையின் நாட்களை வீணாக தொலைத்த வர்கள். கோழியைப் பாருங்கள். முட்டையைப் போட்ட நேரத்தில் இருந்து கத்திக்கொண்டே இருக்கும். கோழியினால் ஒரு அளவுக்கு மேல் பறக்க முடியாது. அதுபோலத்தான் சிலருக்கு அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு அளவு உயரத்துக்கு மேலே போக முடிவதில்லை. அதற்கு அவர்களது வாய்ப்பேச்சுதான் காரணம். ஆனால் கழுகைப் பாருங்கள். எத்தனை மேலே பறந்தாலும் தேவைக்கு மிஞ்சி வாயே திறக்காது. இதனை இப்படியும் சொல்லலாம்:

பணிவுதான் சிலரது உயர்வுக்குக் காரணம்.
மடமைதான் சிலரது வீழ்ச்சிக்குக் காரணம்.

நீமொ 11/12 சொல்கிறது, "அடுத்திருப்போரை இகழ்தல் மதிகெட்டோரின் செயல்; நாவடக்கம் விவேகமுள்ளோரின் பண்பு". பணிவு ஒருவருக்கு வாழ்வில் வரும்போது அவருக்கு ஞானம் வந்து விடுகிறது. இதை மாற்றிச் சொன்னால், பணிவுக்கு எதிரான அகங்காரம் ஒருவருக்கு வந்துவிட்டால் அவர் முட்டாளாய் ஆகின்றார்.

அப்போது அகங்காரம் உள்ளவர்களை நாம் முட்டாள் என்று சொல்வதில் தப்பே இல்லை. முட்டாள் என்ன செய்வார் தெரியுமா...? தனக்குத் தெரிந்ததையெல்லாம் உளறிக்கொண்டே இருப் பார். ஆனால் அறிவாளியோ, எதைப் பேசுகிறோம் என்பதில் தெளிவாய் அறிந்து பேசுவார்.

எனவே, இந்தப் பணிவு உங்களிடம் குறைவாக இருந்தால், இன்னும் பணிவாக நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்; நல்ல பழக்கங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; செய்த தவறுக்கு மன்னிப்பு கேளுங்கள்; தப்பை நீண்டநாள் மறைத்து வாழமுடியாது.

வாழ்வில் உயர அகங்காரம் களைந்து பணிவுடன் உயர வாழ்த்துகிறேன். ■




## ஆள்வோரின் பங்கே!

காணாமல் ஆக்கப்பட்டோம் எங்கே...?
கவலையினால் துடித்தழுவோர் இங்கே
ஊணுண்ண மறந்து தங்கள்
உயிர் விடுக்கும் உறவுகளின்
வாணாள் தனை முடிப்பது தாள்வோரின் பங்கே!



## மக்களின் காயங்கள்

– நற்செய்தி வாழ்விற்கு எப்படி சான்று பகிரலாம். தெருக்களில் நடந்து, மக்களின் காயங்களைத் தொடுவதற்கு ஒருபோதும் அஞ்ச வேண்டாம்.

– உலகில் உன் குரலும் நற்செய்தியின் குரலாக எதிரொலிக்க முன்வந்து பணியாற்ற வேண்டும்.

– நற்செய்தியை அறியாதவர்களை நீ சந்தித்தால் அவர்களுக்கு இயேசுவைப் பற்றி தயங்காமல் அறிவித்து விடு!

– காயப்பட்டவர்களை குணப்படுத்த ஆண்டவர் உன்னை தேர்ந்தெடுத்தார் என்பதை அடிக்கடி நினைத்துப் பார்!

## வினா விடைப் போட்டி - இல 22

### சரியான விடைகள்


1. நற்செய்தி அறிவிப்புப் பணி ஒரு கலை. இந்தப் பணியை பூங்காவில்நடக்கும் ஒரு நடைப் பயணமாக ஒருபோதும் கருதக்கூடாது.
2. மகனே! நீ இருக்க ஒரு கருவறை இருந்தது என் வயிற்றில். நான் இருக்க ஓர் இருட்டறை கூடவா இல்லை உன் வீட்டில்.
3. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்.
4. "உண்மைப் பாதணிகளை போடுவதற்குள் பொய் உலகத்தையே சுற்றி வந்து விடுகிறது.
5. இடிபோல் துயர் தொடர்ந்த போதும் அன்புக் கயிறு உதவிடும் அன்னையவள் செபமாலை
6. இறைவா இதுதான் நான் இதோ நான், இவ்வளவுதான் நான்.
7. "வார்த்தை மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்"
8. 55 இலட்சம் சதுர கிலோமீட்டர்
9. வாழ்வின் மறைபொருளை உருவத்தை
10. வட்ஸ் அப் சட்கள் கூகுள் டிரைவில் சேமித்து வைக்கப்படும். எனவே, நாம் வட்ஸ் அப்பை மீண்டும் இன்ஸ்டோல் செய்யும்போது அழிக்கப்பட்ட மெசேஜ்களை மீண்டும் பெறலாம்.

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

■ A. தினேஸ்,
அதிகார் றோட்,
மட்டக்களப்பு.

■ S. லிகாஷகா,
32, எல்லை வீதி,
இருதயபுரம்.

■ மா. சில்வெஸ்ரர்
525/8, திருமலை வீதி,
மட்டக்களப்பு.



# தீப்புழு

சிறுகதை

● பைந்தமிழ்க்குமரன் டேவிட்

என்னை மீண்டுமாய் என் கிணற்றுக்குள் தள்ளி விட்டனர். சுற்றிவர செங்கற் சுவரும் வலப்புறம் ஒற்றை ஜன்னலும் கிழக்கில் மூன்றடி அகலத்தில் கதவும் கொண்டது எனது உலகம். ஜன்னலருகில் ஒரு சாய்மானக் கதிரை, மறுபுறம் ஒரு மேசை, கதிரை, ஒரு ரேடியோ, ஒரு துவாய், பல் விழுந்த சீப்பு, ஒரு கறுத்தப் பூனை.

யன்னலூடாகப் பார்க்கிறேன், வாய்க்கால் ஓரமாக அந்த நாவல்மரம் சடைத்து நிற்கிறது. அந்தக் குயில் இப்பொழுதும் கூட சோகமாகக் கூவுகிறது. மரத்திலிருந்து பார்வையை நகர்த்தினால் பச்சையாய் பரந்து கிடக்கும் நாணற்பரப்பு, அந்தப் பச்சை நிறம் எனக்கு மிகவும் பிடிக்கும். பழகிப்போன நாணற் புற்கள். அதற்குள் வாழும் பலநூறு பறவைகள். அவை எழுப்பும் பல்வகை ஒலிகள் அவற்றை உள்வாங்கி மெய்மறந்து போகும் இயற்கையின் யாசகன் நான். வானலையில் அந்தப் பாடல் மிதந்து நெஞ்சுக்கூட்டில் கலந்து ஏதோ செய்கின்றது. "வீடுவரை உறவு .... வீதிவரை மனைவி .... காடுவரை பிள்ளை .... கடைசிவரை யாரோ...." பாடலின் வரிகள் இதயத்தில் குருதிக் கீறல்களை வரைந்து செல்கின்றன. இந்தக் கிணறு எனக்கு மட்டுமே சொந்தம். இங்கு எனக்குள் நான் அழுது கொள்வதும் உண்டு. ஆனாலும் நிச்சயமாக வெளியே செல்லும் போது சிரிப்புடன்கூடிய முகமூடியை பொருத்திக் கொள்கிறேன். மீள வந்தவுடன் அது தானாகவே கழன்றுவிழும்.

நான் கடந்து வந்த பாதைகளும் பயணங்களும் பல யதார்த்தங்களை புரிய வைத்தன என்றாலும்கூட இன்னுமாய்த் தோற்று உடைக்கப்பட்டு, நொருக்கப்பட்டு கிணற்றுக்குள் தள்ளப்படுகிறேன். அதோ மேகம் தவழும் வானம். மெல்லிய தென்றல், சிறகடிக்கும் சிட்டுக்கள் அந்த நாவல் மரம் நாணல்கள் நகர்ந்தோடும் நதி இவற்றோடு பேசுவேன். அவை என்னைத் தேற்றும்; தடவிக் கொடுக்கும்; என்னிடமிருந்து வெப்பம் கலந்த பெருமூச்சு வெளிப்பட்டு காற்றில் கலந்து கரைந்து மறையும்.

இந்த தனியுலகில் நான் தள்ளப்பட்ட முதல் சம்பவம் நினைவிருக்கிறது. கிட்டிப்புள் விளையாடவும், ஓடிப்பிடித்து விளையாடவும், பாவாடை கட்டிய பிள்ளைகளுடன் தத்திக்கோடு கீறி, சில்லை மிதித்து, ஒற்றைக்காலால் நொண்டியபடி விளையாடிய போதும், கண்களை பொத்தியபடி புளியடி புளியடி என்று விளையாடிய

போதும் அந்த வயதில் அவர்கள் என்னைச் சேர்த்து விளையாடியதற்காக அடிபட்டார்கள். ஏச்சுப் பேச்சுக்களை வாங்கினார்கள். மம்மி, டடி, மாமா, மாமி யாரும் பார்க்காதபோது வந்து விளையாடும்படி துரத்தினார்கள். அவர்களது அன்புக்காகவும் நட்புக்காகவும் தவம் கிடந்த நாட்கள் அவை. அவர்களுடைய அப்பா, அப்பப்பா காலமுதல் வீடுகளுக்குப் போய் அழுக்குகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வெளுத்து மினுக்கி வயிறு பிழைக்கும் குலத்தவன்; எல்லோரையுமே வாயில போட்டுட்டு தனிக்கட்டையாகக் கிடக்கும் சனியன். ஏசித் திட்டினார்கள்; பேசிச் சிரித்தார்கள்; சபித்தார்கள்.

என் கண்ணாடி உடைந்து சுக்குநூறாகிப் போயிற்று. உடைந்து கிடக்கும் என் மனச் சிதறல்களை எந்தப் பசை கொண்டு எப்படி ஒட்டிக்கொள்வேன் தெரியவில்லை. பழைய சிப்பி ஓடுகள் போடப்பட்ட அந்த ஒற்றை அறையில் அடைக்கலமானேன். எனது உலகம் எனக்கு மட்டுமே சொந்தமானது. வலது பக்க ஜன்னலை தட்டித் திறந்தேன். கிழக்குப் புறக் கதவை அகல விரித்து விட்டேன். "கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியபடிக்கப் பாலாறு.... பாலாறு ...." என்று ஓடிக் கொண்டிருந்தார்கள். கதவை அடித்துச் சாத்திக்கொண்டேன். நாவல் மரத்தில் அந்த ஒற்றைக் குயில் தனித்திருந்து சோகமாய்க் கூவிற்று. அதுவும் என்னைப்போல ஒரு சிறு குயிலா? காகத்தின் கூட்டில் பிறந்ததா? அதை ஏன் தவிக்கவிட்டு அதன் சுற்றம் பறந்து போயின? எதுவுமே விளங்கவில்லை.

ஒரு கல்விமான் உரையாற்றிக்கொண்டிருந்தார். "மனிதன் தனித்து வாழப் பிறந்தவன் அல்ல; அவன் ஒரு சமூக உயிரி. தான் நேசிக்கவும், தன்னை நேசிக்கவும் விரும்பும் உயிருள்ள ஜீவன். இந்த உளவியல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத உலகமே இது" என்று கூறினார். நான் உலகியல் உண்மைகளை மெல்ல மெல்ல அறியத் தலைப்பட்டேன். ஏன் என்னை ஒதுக்கி வைக்கிறார்கள்; நான் தீண்டத் தகாத உயிரியா...? நான் பக்குவமாய்ப் பழகவில்லையா...? இப்படியே என் காலங்கள் கழிந்து போய்விடுமா? எனக்குள் பல கேள்விகளைக் கேட்டேன். என்னை நானே குறை கூறினேன். என் மனப் புண்களை போலித்திரை கொண்டு மூடிப் பார்த்தேன். பசி போக்க வழி தேடி நாயாய் அலைந்து கடைசியில் கிடைத்த வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டேன். மூட்டை தூக்குவது முதல் மலசலகூடங்களைச் சுத்தமாக்குவது வரையும் எதற்கும் தயார்.

■■■

அன்று தற்செயலான ஒரு சந்திப்பு. தவறவிடப்பட்ட ஒரு கைப்பை அவளையும், என்னையும் ஒரு புள்ளிக்குள் தள்ளியது. நாட்களின் நகர்வில் எனது இருபத்திநான்கு வயதும் எடுப்பான உடற்கட்டும் மாநிறமான தோற்றமும் தன்னை வசீகரித்ததாகக் கூறினாள். இணைபிரியா அன்றில்களாய் சிறகடிப்போம் என்று பேசினாள். நான் மெல்ல மெல்ல பலமிழந்து என் உலகத்தை விட்டு வெளியே வந்து காற்றில் மிதக்கத் தலைப்பட்டேன். என் கிணறு அப்படியே இருக்க நான் வெளியேறிய தருணங்களில் அவள் தன் திருமண அழைப்பிதழைத் தந்தாள். நான் வாசலில் வாழை கட்டவும் கதிரைகளை ஏற்றி இறக்கவும் வேண்டும். வாழைக்குலை சுமந்தேன். உணவுத் தட்டுக்களை கழுவினேன். எஞ்சியதில் ஒரு பொட்டலம் கட்டி கூலியுடன் தந்து அனுப்பியபோது மீண்டுமாய் என் கிணற்றுக்குள்ளேயே தள்ளப்பட்டேன். அதே நாவல் மரம், நாணற்பரப்பு, பறவைகளது கீச்சொலிகள், நகரும் மேகங்கள், காலடியில் கறுத்தப்பூனை.

அடுத்த ஒழுங்கையில் மூன்றாவது வீடு. சாமந்தி ரீச்சரின் வீடு. தன் தாயுடன் தனிமையாக கழிந்தன அவள் காலங்கள். மணமுடித்து இரண்டு வருடங்களும் மூன்று மாதங்களும் ஆறு நாட்களும்தான் நீடித்தது அவளது இல்லறம். விபத்தொன்றில் அவன் இறந்துவிட விதவைக் கோலம் அவளை அரவணைத்துக்கொண்டது. தத்தித் தத்தி நடை பயிலும் ஒரு பெண் குழந்தை.

சமையல் வாயு சிலிண்டர் கொண்டு வரவேண்டும். வீடு தூசு தட்டி நீர்த்தாங்கி கழுவி, அவசரத்திற்கு சந்தைக்குப் போக வேண்டும், என்னை நாடுவாள்.

கூலிக்காகப் போனாலும் அந்தப் பிஞ்சு குழந்தையின் சிரிப்பும் மலர்ந்த முகமும் மழலைச் சொற்களும் என்னை ஈர்த்தன. தினமும் ஒரு தரமாவது போய் குழிவிழும் கன்னத்தைக் கிள்ளி, கண்களை விரித்து உதட்டை நெளித்து அதன் மழலைச் சிரிப்பில் நெகிழ்ந்து மனமகிழ்ந்து வந்த நாட்கள் கூட இன்றுடன் முடிந்து போயிற்று.

சாமந்தி ரீச்சரும் தாயும் குழந்தையும் கிடைத்த இட மாற்றத்தை ஏற்று வீடு வாசலை விற்றுவிட்டு வடபுலம் செல்கின்றனர்.


“தனிகட்டயா கிடக்காம ஒரு துணையத் தேடிக்கொள்ளு தம்பி” அந்தத் தாய் சொல்லி சென்றுவிட்டாள். சுவரில் வீசிய பந்து போல என் கிணற்றுக்குள் சுருண்டு விட்டேன்.

தொலைவில் பசுமை படர்ந்த நாணற் பரப்பு பறவைகளின் கீச்சொலிகள், சடைத்த நாவல் மரம், அதில் சோகமாய்க் கூவும் குயில் மீண்டுமாய் என் உலகத்திற்குள் கிடக்கிறேன். இதயம் கழன்று விழுந்து, காலடியில் துடிக்கிறது. கண்கள் குளமாகி கண்ணீர் சொரிகிறது. ■■■



# நற்கருணை ஆண்டிதுவே!

பீ. ஐ. கேடி ரொஞ்கலஸ்



இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே
இறைப்பற்றுடன் இறைமகன் ஈந்த உடலிதுவே,
நேற்றைக்கு உண்டாக்கப்பட்டது போலவே
இன்றைக்கும் புத்தம் புதிய அப்பமிதுவே!

தன்னுடலாகவும், உதிரமாகவும் உலகிற்கு
வன்முறை செய்வோரின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும்
இன்னல் பலவற்றுக்கிடையே இயேசு கிறிஸ்துவும்
மின்னலாய்த் தந்திட்ட கடைசி இராவுணவிதுவே!

திருவிருந்து படைத்திடும் திருப்பலிகளிலெல்லாம்
வருவிருந்து பருகிட வைக்கும் அப்பமும், இரசமுமாய்
மருந்துபோல மனுமகனும் மனிதர் நமக்களித்திட்ட
அருமருந்தே இந்த அற்புத, அதிசய தேவநற்கருணையே!

ஆண்டுக்கொரு கருப்பொருளை உருவாக்கும்
திருஅவையின் வழிபாட்டிற்காய் - நம்
திருத்தந்தையும் இவ்வாண்டினை பிரகடனப்படுத்தினாரே
திருமறையாண்டின் தூய தேவநற்கருணை ஆண்டெனவே!



**கிறிஸ்தவம்** மாணவர் பக்கம்

*- நில்மினி கஜேந்திரன்*    மாதிரி வினாத்தாள் - பகுதி - 1    தொடர் III

**1. புராதன பலஸ்தீனாவின் எல்லையாய் வடக்கே காணப்படுவது :**

1. எகிப்து  2. பெயர்செபா  3. தான்  4. யோப்பா  5. கலிலேயா

**2. பலஸ்தீன நிலப்பரப்பின் நீளம்,**

1.150 மைல்  2. 250 மைல்  3. 100 மைல்  4. 450 மைல்  5. 1500 மைல்

**3. யோப்பா தொடக்கம் செசாரியா வரையுள்ள பரந்த சமவெளி எது?**

1. சாரோன்  2. பெலிஸ்திய  3. மத்திய
4. கடற்கரை  5. அக்கோ சமவெளி

**4. இயேசுவின் வாழ்க்கையோடு இணைந்து காணப்பட்ட பிரதேசமாகிய கலிலேயாவின் வடக்கு எல்லை :**

1. கார்மேல் மலைத் தொடர்  2. லெபனோன் மலைத்தொடர்
3. எசட்ரோன் மலைத் தொடர்  4. சீனாய் மலைத் தொடர்
5. கப்பர்நாகூம் மலைத் தொடர்

**5. பாலஸ்தீனாவிலுள்ள மிக உயரமான நகரமாக விளங்கும் 'எபிரோன்' மலைப் பிரதேசம் அமைந்துள்ளது:**

1. சமாரியா பிரதேசம்  2. யூதா மலைப் பிரதேசம்
3. நெகேபு பிரதேசம்  4. கலிலேயா பிரதேசம்
5. தாபோர் மலைப் பிரதேசம்

**6. 'நெகேபு' என்பதன் பொருள் யாது?**

1. கோபம்  2. சமாதானம்  3. கொடுமை  4.வறட்சி  5. செழிப்பு

**7. சாக்கடலின் ஆழம் கடல் மட்டத்திலிருந்து,**

1. 300 அடி  2. 800 அடி  3. 1300 அடி  4. 100 அடி  5. 750 அடி

**8. கி.மு. 1767ல் எகிப்தைக் கைப்பற்றிய வேற்று இனத்தவர் யார்?**

1. எசேனியர்  2. கைக்கோசு  3. பலஸ்தீனியர்
4. ஏரோதியர்  5. இஸ்லாமியர்

**9. மேய்ப்பர்களின் விழாவான இஸ்ராயல் பாஸ்காவின் முக்கிய அம்சம் :**

1. திராட்சை இரசப் பானம்  2. புளியாத அப்பம்
3. புதிய அறுவடை  4. தலைப்பேறுகள் பலியாக்கல்  5. இரத்தம்

**10. பத்து பெருந் துன்பங்களும் முக்கியமாக எந்த மரபுகளின் அடிப்படை எண்ணக் கருவாகும்?**

1. யாவே, எலோகிம், குரு  2. குரு, இணைச்சட்டம், யாவே
3. யாவே, வாய்மொழி, குரு  4. குரு, எலோகிம், வாய்மொழி
5. வாய்மொழி, குரு, இணைச்சட்டம்



# தமிழ்ப் பிரச்சினை



- பற்றி

கருக்கதை - 107

அன்ரனின் தகப்பனார் நீண்ட நாட்களுக்குப் பின்னர் மகன் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் ஒரு இளைப்பாறிய அதிபர்.

அவர் கதிரையில் இருக்க, அவரின் முன்னே தரையில் பேரப் பிள்ளைகள் அமர்ந்து அவரிடம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் அனைவருக்கும் கோப்பி பரிமாறப்பட்டது.

"அப்பப்பா.... கோப்பியக் குடியுங்க ...." என்று பெரிய பேத்தி சொன்னாள்.

சின்னவன், "அப்பப்பா... நான் கோப்பிய சப்பிச் சப்பிச் சாப்பிட முயற்சிக்கிறன் ஏலுதில்லையே...!" என்றான்.

"ஏன்டா சப்புற .... வடிவா ருசிச்சு குடிங்களன் ...." என்றார் அப்பப்பா.

"இல்ல அப்பப்பா ..... நான் இந்திய ரி.வி. புரோகிராமில பாக்கிறனான், அவங்க காப்பி சாப்பிடுங்க என்றுதான் சொல்றாங்க ... எப்படி அப்பப்பா கோப்பிய சாப்பிடுற.... என்னால ஏலுதில்லையே...." என்றான் சின்னவன்.

அப்பப்பா அன்ரனை நிமிர்ந்து பார்த்தார். அன்ரன் தலையை 'டக்கென்று' குனிந்து கொண்டார்.

அப்போது அப்பப்பா தனது இந்திய பயணமொன்றை அவ்வேளையில் நினைத்துக்கொண்டார்....

சென்னையில் கடையொன்றுக்குச் சென்று 'பாண்' தரும்படிக் கேட்க, அப்படியொன்றும் தன்னிடமில்லை என்று கடைக்காரன் சொல்லிவிட்டான்.

கண்ணாடிப்பெட்டியில் இருந்த பாணைச் சுட்டிக் காட்டி கேட்க, கடைக்காரன், 'பிரட்' என்று தமிழில் சொன்னா தந்திருப்பனே.... இலங்கையாக்களோட கொஞ்சம் மொழிப் பிரச்சினைதான்....." என்றான். ●

## நியமனங்கள்

அருட்பணி **S. இக்னேசியஸ்** அவர்கள் புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயம் - கொக்கட்டிச் சோலை, நல்லாயன் ஆலயம் - பழுகாமம், புனித நல்லாசீர் அன்னை ஆலயம் - அம்பிளாந்துறை பங்குகளின் பங்குத்தந்தையாக 16.02.2020 முதல் செயற்படுவார்.

அருட்பணி **அமில டயந்த பெர்னாண்டோ** TOR அவர்கள் புனித இஞ்ஞாசியார் ஆலயம் – அம்பாறை பங்கின் உதவிப் பங்குத் தந்தையாக 04.02.2020 முதல் செயற்படுவார்.

அருட்பணி **T.A. ஜூலியன்** அவர்கள் சிறிய குருமட அதிபராக 19.02.2020 முதல் செயற்படு வார்.

**பணி சிறக்க வாழ்த்துகிறோம்!**

# என்னை சிறையில் அடைத்தார்கள்



குடும்ப வாழ்வை மகிழ்வோடு ஆரம்பிக்கின்ற பலர் அந்த மகிழ்வை விரைவிலேயே இழந்து விடுகிறார்கள். வசதியாகவும், மகிழ்ச்சியாகவும், குறைகளின்றியும் சொத்துக்களோடு மாடி வீடு களில் வாழுகின்ற மனிதர்களின் மத்தியில் வேதனைகளோடும், பசியோடும், துன்பங்களை அனுபவித்தும் பலரும் வாழ்க்கையோடு ஒவ் வொரு நாளும் போராடிக்கொண்டுதான் இருக்கி றார்கள்.

தொழில் இல்லை: எப்படி எதிர்காலம் அமையப்போகிறது, இருக்க வீடில்லை: எத்தனை நாட்களுக்கு வாடகை வீடுகளை நம்பி இருப்பது, வசதி இல்லை: எப்படி பிள்ளைகளை பாடசா லைக்கு அனுப்புவது என்ற கேள்விகளோடு ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்பவர்கள் அதிகம். வெளியிலே சொல்லமாட்டார்கள், பேசிப் பார்த்தால் புரியும் அவர்கள் படுகின்ற வேதனை கள். இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே என்று சிந்திக்க வைக்கிறது. இந்த வயோதிபரின் வாக்குமூலம்.

**"எனது** மூத்த மகன் கொழும்பில் மேசன் வேலை செய்துகொண்டிருந்தார். அவருடைய மனைவி அவரை விட்டுச் சென்றதன் பின்னர் அவரது பிள்ளைகளை நானும் எனது மனைவியும் தான் பராமரித்து வந்தோம்...

ஏழு வருடங்களுக்கு முன்னர் அன்றொருநாள் செய்தி வந்தது: "மூத்தமகன் வேலை செய்யும் போது பாலத்திலிருந்து விழுந்துவிட்டார்!" என்று.

நான் அணிந்திருந்திருந்த ஆடையுடன் மகனிற்கு என்ன நடந்ததோ என்று பதறிப்போய் கொழும்பு வரும் ரயிலில் தொற்றி ஏறிக் கொண் டேன்.

அப்போது என்னிடம் பணம் இல்லை என்பது கூட எனது நினை விலிருக்கவில்லை. என்னுடைய துரதிஷ்டம் ரயில் டிக்கெட் பரிசோதகர் அந்த சமயம் பார்த்து அங்கே வந்துவிட்டார்.

டிக்கெட்டைக் கேட்டார். டிக்கெட் இல்லாத காரணத்தினால் அடுத்த ஸ்டேஷனில் என்னை ஒப்படைத்தார்.

எனது நிலைமையை எவ்வளவு தெளிவுபடுத் தியும் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

நீதிமன்றத்தில் ஒப்படைத்து ரூ. 2500/= தண்டப்பணமும் விதித்தார்கள்.

குறித்த தண்டப்பணத்தை செலுத்துவதற்கென கையில் ஒரு சதம் கூட இல்லாத நிலையில்... நான் எங்கே பணத்தைத் தேடிச் செல்வது !??
எனவே என்னை சிறையில் அடைத்தார்கள்....!

ஏழு வருடங்களுக்குப் பின்னர் இந்த சுதந்திர தினத்தில் விடுதலை கிடைத்துள்ளது... ஏழு வருடங்களாக எனது மனைவி, மூத்த மகனுக்கு என்ன ஆனதென்று எதுவும் தெரிய வில்லை.

இந்த உண்மைச் சம்பவம் எம் உணர்வுகளைத் தூண்டி, உதவி செய்கின்ற கரங்களாக நாம் ஒவ்வொருவரும் மாறி, மற்றவர்களை நேசிக்க ஆரம்பிக்கின்றபொழுது பலரின் துன்பங்களைத் துடைத்து, இருண்டு கிடக்கின்ற அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க முடியும். வேதனை யோடு வாழ்கிறவர்கள் வேற்றுக் கிரகத்தில் அல்ல நம்மோடுதான் இருக்கிறார்கள்.

வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு விடியட்டும் ஒவ்வொரு ஏழையின் இரவும் ....



# தவணை முறையில் ஒரு மரணம்!

■ திருமதி. கிரிசாந்

அகத்தின் அழகு முகத்தில் முன் நிற்கும்!
முகத்தின் அழகு தூக்கத்திலே சார்ந்திருக்கும்!
தூக்கத்தின் விஞ்ஞாபனத்தை விழிகள் சொல்லும்
சோர்ந்த விழிகள் தூக்கம் மறந்ததை
பறைசாற்றும் புரண்ட பார்வைகள்
தூக்கத்தின் ஏக்கத்தினை நிலை நிறுத்தும்.
அழகு கயல் விழிகள் தூக்கம் வருமென பாடும்.

மனித படைப்பின் இலவச இணைப்பு தூக்கம்!
சொர்க்க வாசலின் அறிமுக விழா தூக்கத்தினிலே
சுகதேகி மனிதனின் ஆரோக்கிய கட்டாய பாடம்
அரங்கேறும் நித்தமும் இரவு எட்டுமணி நித்திரைதனிலே!

முணங்கும் மூளைக்கு ஓர் ஓய்வு
அசைவின்றி அலைபாயும் மனதுக்கு ஒரு விடுமுறை
களைத்த உறுப்புக்கு ஓர் நுகர்வு தியாகம் தூக்கம்
மூளையின் முன்னேற்பாடு
உடலின் எதிர்பு சக்தி
யாவுக்கும் மூலாதாரம் தூக்கம்

தூக்கத்தின் பற்றாக்குறை
மனச்சோர்வோடு நீரிழிவுக்கும் நிதர்சனம்!
இதய நோய்க்கு தூபமிடுவது நித்திரையின்மையே!
புரண்டு படுத்தாலும் இங்குண்டு
ஆயுதமற்ற போராட்டம் நித்திரைக்காய்!

அழகாக தூங்குபவர்கள்
அழகின் இலக்கணமான பெண்களாவர்
இருந்தும் தூக்கத்தில் தவிப்பவர்களுக்கு
அவர்களுக்கு நிகர் வேறில்லையென
ஆய்வுகளின் தம்பட்டம் வேறு!

இன்றைய நுகர்வு தியாகம்
நாளைய சேமிப்பு!
தூக்கத்தின் தியாகம் ....
பாடசாலை மாணவன் பரீட்சைக்காய் ...
பல்கலைக்கழக மாணவன் முதல் வகுப்புக்காய் ...
தாய் சேய்க்காய்
தொழிலாளர் வேதனதுக்காய்
காவலன் கடமைக்காய் ...
கலைஞன் படைப்புக்காய் ....
அறிவிப்பாளன்
அடையாளப்படுத்தலுக்காய் ....
கவிஞன் ஜீவ உயிர்ப்புக்காய்
என நீள்கிறது பட்டியல் ....!

இருந்தும்,
தூங்கியே வாழ்பவன் சோம்பேறி!
தூங்காமலே சாதிப்பவன் படைப்பாளி
தவணை முறையில் மரணமானாலும்
உரிமையோடு மரணிப்போம்
உயிரோட்டத்தோடு அவதரிப்போம்
புதிய படைப்பாளிகளாய் .....

எந்த ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்தாலும் சரி. அது எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் சரி. அதை முடித்துவிட்டுதான் மறுவேலை பார்க்க வேண்டும். - கிளாட்ஸ்டன்

பிறரிடம் தீயசொல் பேசுவது உனக்கு இன்பமானால் அவர்கள் உன்னைத் திருப்பித் தாக்குவதையும் நீ இன்பமாகவே கொள்ள வேண்டும். - புத்தர்




# தமிழ் இனி சாகுமா ....?

- குடிமகன் -

நமது நாட்டின் இன்றைய அரசியல் போக்குகள் ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. இனவெறியை ஊட்டி, அரசியல் இலாபம் தேடும் சந்தர்ப்பவாத அரசியலே மேலோங்கியுள்ளது. விமானக் கொள்வனவு ஊழலில் கைது செய்யப்பட்டவரைக் கைதுசெய்வதுபோல் செய்து பின்னர் குற்றச் சாட்டுகளை இலகுவாக்கி வெளியில் கொண்டுவர சிறப்பாக நாடகமாடுகின்றார்கள். அரச தரப்பு சட்டத்தரணிகள், காவல்துறை அதிகாரிகள் என்போரை அகற்றி புதியவர்களை நியமித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நீதிமன்றம்தான், உண்மைகளை வெளிக்கொண்வர ஆவணசெய்ய வேண்டும்.

தமிழர்களின் அரசியல் இருப்பை அகற்றிவிட, திட்டம் தீட்டி செயற்படுகின்றார்கள். தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படுவது தவிர்க்கப்படுகின்றது. “மெல்ல மெல்ல தமிழினிச் சாகும்” என்று கூறியது இதைத்தானோ தெரியாது. மன்னார் புதைகுழி விவகாரம் அமுக்கப்பட்டு விட்டது போல் மாங்குளம் புதைகுழியும் மறைக்கப்பட்டுவிடும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கதை கந்தலாகிவிட்டதா? ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகளின் கெட்டித்தனம், வாய்ச்சொல் வீச்சு எல்லாம் எங்கே? “நக்குண்டார் நாவிழந்தார்” அல்லவா? சுயலாபத்திற்காகவும் சுய பாதுகாப்பிற்காகவும் அல்லவா ஒட்டிக் கொண்டுள்ளார்கள் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

தமிழ் அரசியற் கட்சிகள் துண்டு துண்டாகிக் கொண்டு போகின்றன. வல்லரசு சக்திகள் என்று கூறிக்கொண்டவர்களின் விருப்பத்திற்காகவும், திட்டத்திற்கமையவும் தாங்களே அமீபா போல் துண்டு துண்டாகி பலவீனமாகின்றனர்; பணமும் புழங்குகின்றது.

‘கொரேனா’ வைரஸ் வந்ததன் விளைவு நோய்மூல இறப்புகள் மட்டுமின்றி, இலங்கையின் பொருளாதாரமும் அறுந்துகொண்டுதான் போகின்றது. சீனாவின் பொருளாதார நிழலில் வாழ்ந்து வந்த இலங்கை, அந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டு விட்டது. எடுத்த கடன்களை மீள் செலுத்த தலைவர்கள் பாரதம் இரந்தனர். அது பெருமளவில் தோல்வியில் முடிந்துவிட்டதாக நம்பப்படுகின்றது. இலங்கையின் பெரிய, சிறிய செயற்றிட்டங்கள் எல்லாம் வெளிப்படுத்தப்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டன; ஆனால் அறிக்கை ரீதியாக நடைமுறைப்படுத்தப்படுவதாக காட்டப்படுகின்றது.

மூன்று தினங்களில் எட்டு தேசிய பாடசாலைகளை உண்டாக்குவதாக ஒருவர் வீராப்புப் பேசினார். சில வாரங்கள் ஓடிவிட்டன. எங்கே அவை?


மக்கள் வாய்மூடி மௌனமாக இருந்தால் அவர்கள் முட்டாள்கள் அல்ல; வாக்குப் போடும் போது காட்டுவார்கள். 'மொட்டு, கதிரை, கையெல்லாம்' ஒன்றிணைகின்றன. ஆனால், யானை துண்டு துண்டாக உடைகின்றது. அப்படியானால் யானைபோல் பலம் யாருக்குக் கிடைக்கும்?

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை ஒன்றிணைய விடுங்கள்; மலையக மற்றும் தென்னிலங்கை தமிழ் மக்களின் நிலை வேறு. இளம் சமுதாயம் சிந்திக்க வேண்டும்.

கத்தோலிக்க மக்களின் இலங்கை உயர் பீடமே, “இலங்கை சிங்கள பௌத்த நாடு” என்று சொல்லிவிட்டது. இவ்வேளையில் நமது தமிழ் ஆயர்கள் 'இராயப்பு யோசப்' ஆண்டகை போல் விழித்து நிற்க வேண்டும். தமிழ் மக்களின் பாதுகாப்பரண்களாக மேம்பட வேண்டும். ■

## தன்னலம் வேண்டாம்

- இந்த உலகம் தன்னலத்தை வழிபட நன்றாகவே கற்றுத்தருகிறது.
- தன்னலத்தில் இருந்து கொஞ்சம் விலகி நடப்பது நன்மை தரும்.
- கல்வி என்பது மக்களை, ஒளியை நோக்கி நடத்திச் செல்லும் செயல்திறன் கொண்டது. அது முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும்.
- நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முடிந்த வரை அதைக் கற்றுக்கொடுங்கள்.
- அமைதியைக் காப்பதும், வளர்ப்பதும் கல்வியே. கல்வி கற்பது நல்ல அமைதியான எதிர்காலத்திற்கு உதவி செய்யும்.
- தன்னலத்தை ஒதுக்கி பிறர் நலத்தை நாடுங்கள்.





## பயனுள்ள குறிப்புகள்...

ஹொட்டல், ஹொஸ்டல் போன்ற இடங்களில் பயன் படுத்தப்படும் தட்டு மற்றும் டம்ளர்களைச் சரியாக கழுவவில்லை என்றாலும், சலட் போடப்படும் பச்சைக் காய்கறிகள், பழங்களை சுத்தமான தண்ணீரில் அலசவில்லை என்றாலும் அமீபியாசிஸ் எனும் தொற்றுக்கிருமி தாக்குதல் ஏற்படும். இதனால், சாப்பிட்டதும் மலம் கழிந்துவிடும். கவனிக்காமல் விட்டால் உடல் மெலிந்து எதிர்ப்புச் சக்தியை முற்றிலுமாக இழக்க நேரிடும். ■

‘போரடிக்கிறது’ என அடிக்கடி கோப்பி, தேநீர் குடிக்கக் கிளம்பாமல் தூய்மையான தண்ணீரைக் குடிப்பதே நல்லது. ■

சாப்பிட்டதும் நெஞ்செரிச்சலா? சிறிது சீனி கரைத்த நீரை அருந்தினால் போதும். ■

வியர்வை தங்கிய உடையுடேனேயே இருப்பது ஆபத்தானது. அதுவே நோய்த் தொற்றுக்கான காரணியாக அமைந்துவிடும். ■

வயிற்றுப்போக்கில் இருந்து விடுபட உடனடி உபாயம் வெறும் கொய்யா இலைகளை மெல்வது தான். ■

நீங்கள் நீண்ட நேரமாகத் தண்ணீர் குடிக்காமல் இருந்தாலும்கூட சிறுநீர் மஞ்சளாக போகும். ■




திரு.தேவ அலோசியஸ்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் **மனித உரிமைகளுக்கும் சமாதான கற்கைகளுக்குமான** டிப்ளோமா பாடநெறியில் திரு தேவ அலோசியஸ் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையிலிருந்து ....

– சென்ற இதழ்த் தொடர்ச்சி

**போ**ர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று ஆட்சியும் அதிகாரமும் மாறிக்கொண்டிருந்த போதே இன முரண்பாடுகளும் தோன்ற ஆரம்பித்துவிட்டது எனலாம். இதற்கு அடிப்படையான சில அம்சங்களில் 1833இல் ஆங்கிலேய ஆட்சியில் இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது ஆங்கிலக் கல்வியே அரசாங்க சேவைக்கு அவசியமாய் இருந்தது. இலங்கைத் தமிழர், சிங்களவரை விட ஆங்கிலக் கல்வியில் சிறந்து விளங்கினர். குறிப்பாக, 1911இல் தாழ்நிலச் சிங்களவரில் 3.5 சதவீதமும், கண்டிய சிங்களவரில் 0.7 சதவீதமும் ஆங்கிலக் கல்வியில் காணப்படுகையில் தமிழர்களோ 4.9 சதவீதம் ஆங்கிலக் கல்வியில் சிறந்து விளங்கினர். இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழர்கள் அரச சேவைக்காக கொழும்பை நோக்கிவர வேண்டி இருந்தது. இதுவும் இன முரண்பாட்டுக்கு வித்திட்டது எனலாம்.

இன்னுமொரு விடயத்தை ஆராய்வோமானால், 1830க்குப் பின்னர் ஆங்கிலேயருக்குச் சொந்தமான பெருந்தோட்டச் செய்கைக்கு இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட தமிழர்கள், "தமிழ்" என்ற ஒரே மொழியைப் பேசியதும், சிங்களவருக்குச் சொந்தமான காணிகள் ஆங்கிலேயர் தோட்டமாக மாறி அதில் தமிழ் பேசுவோர் குடியேறியதும், தொழில் வாய்ப்புப் பெற்றதும் இன முரண்பாட்டிற்கு வித்திட்டது எனலாம்.

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இனமோதலுக்கான முனைப்பு தீவிரமடையத் தொடங்கியது. இலங்கையில் சிங்களப் பெரும்பான்மையால் உருவாக்கப்பட்ட பிரசாவுரிமைச் சட்டமானது. மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதுடன் 70% சிங்கள மக்கள் 80% மான பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றத்தில் வகிக்கவும் செய்தனர். பிரஜா உரிமை பறிக்கப்பட்டதன் மூலம் இலங்கைப் பாராளுமன்ற பிரதிநிதித்துவப் பட்டியலில் தமிழ் இனம் இன்னும் ஒடுக்குமுறைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது.

1970ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின், 1971இல் பிரகடனப்படுத்தப்பட்ட தீர்மானத்தின்படி (அவசரகாலச் சட்டத்தின் பிரகாரம்) தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச்


சுதந்திரமும் நீக்கப்பட்டு, பத்திரிகை தணிக்கை கண்டிப்பாக அமுல்படுத்தப்பட்டு, ஒரு அவசரகால நடவடிக்கையின் கீழ் தமிழர்கள் நடத்தப்பட்டனர்.

இலங்கையின் சிங்கள-தமிழ் இன முரண்பா டானது “வூட்” கூறியது போன்று வேகமாக மாற்றம் பெறும் எதிரெதிர் நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் கொண்டதாகவும் காணப்ப டுகின்றது.


முரண்பாட்டின் அல்லது இனமோதலின் முதற்கட்டமாக அமைவது, 1937இல் அரசியல மைப்பினூடாக உத்தரவாதத்துடன், அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான தமிழரின் கோரிக்கை யுடன் தொடர்புடையதாயிருந்தது. (கே.எம்.டி. சில்வா, 1986: 103-05) இது ஏற்றுக்கொள்ளப் படாததால் 1949இல் பிரிவினைவாதம், அதாவது தமிழ்ப் பிரதேசங்களுக்கு குறிப்பிடத்தக்க சுயாட்சி கொண்ட, ஒரு சமஷ்டி அரசினை உருவாக்குதல் என்பதாக மாறியது. (கே.எம்.டி. சில்வா, 1986:181-2) 1976ம் ஆண்டளவில் பிரிவினை எய்தப்பட்டிராத அரசொன்றை தாபிக்க வேண்டுமென முனைப்புக் காட்டியது. (கே.எம்.டி. சில்வா 1986: 259-61).

தொடரும் .....

## திரளா அடம்பன் கொடிகள் ....




உலகெங்கும் வாழுமினம் வாழ்ந்தபோதும்
உலகிற் சிறு மூலையதும் சொந்தம் அற்றோர்
பல கோடிப் பணமுண்டு கப்பல் ஓட்டிப்
பாரெங்கும் புகழ் பெருக்கி வாழ்வோருண்டு
நலமாக ஒற்றுமையை வளர்த்து மண்ணில்
நவயுகத்தில் தலைநிமிர்ந்து வாழ மாட்டார்
குலப்பெருமை தாம் பொழிந்து குழம்பி ஈற்றில்
குறைவற்று ஒன்றிணைய மறந்து நிற்பர்.



அரசியலில் பல அணிகளா யிவர்
ஆளையாள் கவிழ்ப்பதிலே குறியாவர்
திளைா அடம்பன் கொடி போலும்
சிறு சிறு குழுவாய் உழல்வார்கள்
ஒருநிலை கொள்கை இவர்க்கில்லை
ஒருவர்க் கொருவர் தடைக் கல்லாய்
உரசி உரசித் தீமூட்டி
ஒன்றாய்த் தீயதில் குளிப்பார்கள்!

தாமே தலைவன் என்றெண்ணித்
தன் மானத்தை இழப்பார்கள்
ஏமாற்றிப் பொருள் குவிப்பார்கள்
ஏழையர் தளிர்த்தால் நசிப்பார்கள்
ஆமாமிவர்க்கோர் தலைவனென
ஆண்டவன் வரினும் அணையார்கள் ....
'கோமான் செல்வா' வார்த்தையதும்
குமைந்தது, இவர்களை ஏகனும் காப்பாற்றான் ......?

# வாழ்க்கையை இழந்து போகலாமா ...?

10

செ. அன்புராசா அடிகள்

*அமைதித் தென்றல், முல்லைத்தீவு, அதிர்வுகள் – 02*

உல்லாசப் பயணி ஒருவன் நதியொன்றைக் கடக்கப் படகோட்டி ஒருவருடன் படகொன்றில் பயணிக்கிறான். பயணத்தை ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே திடீரெனக் கடும் காற்றுடன் நதி பெருக்கெடுக்க ஆரம்பிக்கிறது. இவ்வாபத்தான நிலையினை உணர்ந்துகொள்ளாத உல்லாசப் பயணி படகோட்டியிடம், "உனக்குப் பாடத் தெரியுமா?" எனக் கேட்கிறான். அவனோ தனக்குத் தெரியாது என்கிறான். "அவ்வாறாயின், வாழ்க்கையில் கால்வாசியை நீ இழந்து விட்டாய்!" என்ற உல்லாசப் பயணி, "சரி, ஓவியமாவது வரையத் தெரியுமா....?" என மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்கிறான். படகோட்டி அக் கேள்விக்கும் தெரியாது எனக் கூறிவிடுகிறான். "அப்படியென்றால் வாழ்க்கையில் அரைவாசியை இழந்து விட்டாய்!" என்று சொல்லிவிட்டு, "பறவாயில்லை, கார் செலுத்தவாவது உனக்குத் தெரியமா?" எனக் கேட்க, அதற்கும் அவன் தெரியாது என்கிறான். "வாழ்க்கையில் முக்கால்வாசியை இழந்துவிட்டாய்!" என்றபோது படகோட்டி பதட்டம் அடைந்தான். அதுவரை படகைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தவன் வாழ்க்கையில் முக்கால்வாசியை இழந்துவிட்டாய்" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் பதட்டப்பட்டு துடுப்பைக் கைவிட்டு விடுகிறான். படகு நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுகிறது.

இந்நிலையில், படகோட்டி உல்லாசப் பயணியைப் பார்த்து, "கடும் காற்றும் ஆற்று வெள்ளமும் படகை மூழ்கடித்துவிடும் போலிருக்கிறது. படகு, நீரில் மூழ்கினால் நீந்திக் கரைசேர உனக்கு நீச்சல் தெரியுமா?" எனக் கேட்க, அவன் தெரியாது என்கிறான். இப்போது படகோட்டி, "அப்படியானால் நீ உன் வாழ்க்கை முழுவதையும் இழக்கப் போகிறாய்..." என்றபோதுதான் உல்லாசப் பயணி தன் நிலையையும் கள நிலையயும் உணர்ந்தான்.

இவ்வுல்லாசப் பபயணியைப் போலத்தான் தன் நிலையையும் கள நிலையையும் உணராத பல பேர் வழிகள் இன்று இருக்கிறார்கள். அவர்கள் வெள்ளம் மூக்கில் முட்டும் வரை அசமந்தப் போக்குடன் இருப்பவர்கள். வெள்ளம் மூக்கிற்கு மேல் சற்றே ஏறினாலும் சாணென்ன, முழமென்ன? எல்லாம் ஒன்றுதான் என்பதை எப்போது தான் இவர்கள் உணரப் போகிறார்களோ?


## வாழ்க்கை திட்டமிட்டபடி திசைமாறிச் செல்கிறதா?

பட்டிமன்றம் ஒன்று நடைபெற்றது. "இவ்வுலக வாழ்க்கை திட்டமிட்டபடி செல்கிறதா?" அல்லது "இவ்வுலக வாழ்க்கை திசைமாறிச் செல்கிறதா?" என்பதுதான் விவாதத்திற்கான இரு தலைப்புகள். காரசாரமான விவாதங்கள் இரு குழுக்களாலும் முன் வைக்கப்பட்டன.

நடுவர் எக்குழுவிற்கு முதலிடம் கொடுப்பது எனத் திக்குமுக்காடிப் போனார். இறுதியில் நடுவர், தம் முடிவை, "இவ்வுலக வாழ்க்கை திட்டமிட்டபடி, திசைமாறிச் செல்கின்து!" எனக் கூறி அமர்ந்தார்.

விவாதித்த இரு குழுக்களின் விவாதங்களும் ஒருபுறமிருக்க நடுவரின் சிந்தனை விவாதங்களின் முடிவுகளைக் கடந்து வாழ்க்கையின் இன்றைய யதார்த்தத்தைக் காட்டுவதாகவே தெரிகிறது.

→



# வியாகுலப் பிரசங்கங்கள்

- ப. டெனிஸ்டன்



வாசகர்களே! தபசுகாலம் ... அதிலும் அதன் பரிசுத்த வாரம் என்றாலே கத்தோலிக்கர்களாகிய நமக்கு நினைவுக்கு வருவது "வியாகுலப் பிரசங்கங்களே". கத்தோலிக்க மக்கள் பக்தியார்வத்தோடு ஆலயங்களிலும், அதன் முற்றங்களிலும், தெரு சந்திப்புகளிலும் ஒருவர் உருக்கமாக வாசிக்க மற்றவர்கள் அதைக் கேட்டு நமதாண்டவரின் கொடிய பாடுகளில் ஒன்றித்து, கண்ணீர் சொரிந்த காட்சிகளைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு திருச்சபையில் காணாமல் போய்விட்ட அல்லது கைவிடப்பட்ட அநேகப் பொக்கிஷங்களில் வியாகுலப் பிரசங்கங்களும் ஒன்று! அண்மையில் அதனைப் பற்றி ஆராய்ந்தபோது கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஜெரோம் கொன்சால்வேஸ் சுவாமியார் 1676-ம் ஆண்டு ஜுன் மாதம் கோவாவில் பிறந்தார். அவருடைய குடும்பம் இரண்டு அல்லது மூன்று தலைமுறையாகக் கத்தோலிக்கர்களாய் இருந்ததால் நல்லதோர் கத்தோலிக்க சூழ்நிலையில் வளர்ந்தார். வளரும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல் சிறுவயதிலே இசை ஞானமும், பாடற் திறனும் கொண்டிருந்தார். பின்னர் கல்லூரியில் பயிலும்போது அக்கல்லூரியின் பாடகர் குழுவில் ஓர்கனிஸ்ட்டாக (Organist) இருந்தார். அங்கு தன்னுடைய திறமையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். அச்சமயம் அவர் தற்செயலாய் வாசித்த ஒரு கத்தோலிக்க இதழில், இலங்கையில் புதிதாய் ஆரம்பிக்கப் பட்டுள்ள கத்தோலிக்க செயல்பாடுகளைப் பற்றி அறிந்தார். பின்னர் அச்செயலுக்காக தன்னையும் அர்ப்பணிக்க எண்ணி குருமடத்தில் சேர்ந்தார். 1700-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ம் நாள் குருப்பட்டம் பெற்றார். ஆனால் இவருடைய பாதை சுமுகமாய் இல்லை. பெற்றோருடைய எதிர்ப்பை மீறி சர்வேசுரனுடைய பணிக்கு தன்னை பலியாக்கினார். பின்னர் சில ஆண்டுகள் மடத்திலே தங்கி மேற்படிப்பை மேற்கொண்டார். மெய்யியலில் இவருடைய திறனையும், ஆர்வத்தையும் கண்டு இவரை அம்மடத்திலே பேராசிரியராய் நியமித்தனர்.

ஒருநாள் குருமடத்திற்கு ஒரு சிறப்பு விருந்தினர் இலங்கையிலிருந்து வருகை தந்தார். அவரே பின்னாளில் முத்திப்பேறு பட்டம் பெற்ற சங். ஜோசப் வாஸ் என்ற குருவானவர். அவர் ஆற்றிய உரையினால் ஈர்க்கப்பட்டவர்கள் பலர். அவர்களில் ஒருவர் நம் ஜெரோம் கொன்சலஸ் சுவாமியார்.

பின்னர் சில மாதங்களில் இவர் இலங்கைக்குப் பயணமானார். கரையேறியதும் அவர் உடனே அந்நாட்டு மொழியைக் கற்கத் தொடங்கினார். முதலில் தமிழும், பின்னர் சிங்களமும் வெகு விரைவில் கற்றுக்கொண்டார். கண்டி மாகாணத்திற்குப் பொறுப்பாயிருந்த அவர், பல வகையில் கத்தோலிக்க மதம் பரவ காரணமாயிருந்தார். தன்னுடைய ஜெபத்தினாலும், தவத்தினாலும், பலருடைய மதமாற்றத்திற்கு காரணமாயிருந்தார். பதிதர்களுடனான வாக்குவாதத்தில் கத்தோலிக்க சத்தியத்தைத் தெளிவாகக் காண்பித்த அவர், பலருடைய மனதை வென்றார். மிகப்பெரிய மாகாணத்தை நிர்வகிக்கும் பொறுப்பு அவர்மேல் சுமத்தபட்டிருந்தாலும் அதனை மிக நேர்த்தியாக செய்தார்.

இத்தனை கடின உழைப்புக்கு மத்தியிலும் பல நூல்களை அவர் இயற்றத் தவறவில்லை. சிங்கள மொழியில் 22 புத்தகங்களையும், தமிழில் 15 புத்தகங்களையும் அவர் எழுதி வெளியிட்டார். அவைகள் வேதசாஸ்திரம், தேவ அன்னை, தேவ நற்கருணை, திருச்சபை கட்டளைகள் என பல்வேறு தலைப்புகளோடு பிரசுரமாயின. இவை அனைத்திலும் தலைசிறந்ததாய் புகழப்படுவது வியாகுல பிரசங்கங்கள். தன்னுடைய விசுவாசிகளுக்கு மட்டும் எழுதிய இப்படைப்பின் புகழ் தமிழ் உலகம் முழுவதும் பரவியது. அவருடைய நண்பர்கள் உதவியாய் 300 கையெழுத்து பிரதிகள் தயாரிக்கப்பட்டன. பின்பு 1844-ம் ஆண்டு கொழும்பில் மீண்டும் இப்புத்தகங்கள் அச்சிடப்பட்டன. பின்னர் 1871-ல் சென்னையிலும் அதற்குப்பின் யாழ்பாணத்திலும் பலமுறை அச்சிடப்பட்டன. ■

→ - 23ம் பக். தொடர் .....




இலக்கு இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகு போன்றது. போகும் இடமும் அறியாமல் சேரும் இலக்கும் தெரியாமல் வாழ்க்கைக் கப்பல் அலைக்கழிக்கப்படுகிறது.

பொதுவாக நோக்கினால், கவிப்பேரரசு வைரமுத்து கூறுவது போல், "வாழ்க்கை பற்றிய அனுமானமோ, வாழ்க்கையில் ஒரு பிடிமானமோ இல்லாமல் 'நீர்வழிப் படூஉம் புனைபோல்' புறப்பட்ட இடமும் தெரியாமல், போகும் இடமும் புரியாமல்....." பலருடைய வாழ்வு நகர்ந்து கொண்டிருப்பதாகவே கருதவேண்டி இருக்கிறது.

"வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசி, விதி வந்ததும் சாவோம்" என்று இருப்பது ஒரு வாழ்வாகுமா? என ஆனந்த வாழ்வியல் என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுவார். இக்கால இளவல்கள் "ஏன் பிறந்தாயோ மகனே(ளே) ஏன் பிறந்தாயோ!" என அவர்களைப் பார்த்துப் பாடவேண்டி, கேட்க வேண்டி இருக்கிறது. ■




- கடவுளின் தாய், எலிசபெத்தம்மாளைச் சந்தித்து அவரோடு மகிழ்வு என்னும் கடவுளின் கொடையைப் பகிர்ந்தார்.
- அப்படிப் பகிரும்போது எலிசபெத்தும் தூய ஆவியாரின் கொடையால் நிரப்பப்பட்டார்.
- அப்படி ஆவியானவர் வந்திறங்கியபோது தனது உறவினரான கடவுளின் அன்னையை ஆசிர்வதித்தார்.
- நாமும் மகிழ்வினை மற்றவர்களுடன் பகிர்ந்திடுவோம்.
- கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவரின் அன்பில் ஒருவர் மற்றவரை சந்திக்கும் போது ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படுவோம்.



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 24

1) விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் எந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்?
..........................................................................................................

2) கடவுள், சொர்க்கம், மறுபிறவி என்றெல்லாம் பேசுபவர்கள் யார்?
..........................................................................................................
..........................................................................................................

3) புனித மார்டீன் எதில் ஆர்வம் காட்டினார்? ..........................................................
..........................................................................................................

4) தொண்டன் சஞ்சிகை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? அண்மையில் எவ் விழாவைச் சிறப்பித்தது ? ..........................................................
..........................................................................................................

5) கருவில் இருக்கும் சிசு அழுவது எக் கருவி மூலம் கண்டுபிடிக்கபட்டது?
..........................................................................................................

6) மறையுரை எவ்வாறு ஆற்றப்பட வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆயர்களுக்குத் தெரிவித்தார்? ..........................................................
..........................................................................................................

7) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நற்கருணை மாநாட்டினை எங்கே, எத்தனையாவது ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்? ..........................................................
..........................................................................................................

8) பூமிக்கு மேல் இரண்டு நிலவுகள் இருப்பதைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள் இந்த நிலவுகளுக்கு யாருடைய பெயரைச் சூட்டினார்கள்? ..........................................................
..........................................................................................................

9) துறவற வாழ்வு எத்தனையாம் ஆண்டு யாருடைய காலத்தில் தொடங்கப்பட்டது?
..........................................................................................................

10) பிஸியோதெரபி எனப்படுவது: ..........................................................
..........................................................................................................
..........................................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

பங்கு / தொ.பே.இல : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி :**

**வினாவிடைப் போட்டி - 24**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.03.2020




## சரியான விடைகளை உரோமையர பகுதியிலிருந்து தெரிந்து எழுதவும்

1. "தாவீதின் வழிமரபினர்! தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ளவர்" இவர் யார்?

.....................................................................................................

2. உள்ளத்தில் செய்யப்படும் விருத்த சேதனம் யாரால் செய்யப்படுவதாகும்?

.....................................................................................................

3. "ஆபிரகாம் கடவுள் மீது நம்பிக்கை கொண்டதால் அதை அவருக்கு எவ்வாறு கருதினார்? .....................................................................................................

4. நாம் கிறிஸ்து இயேசுவோடு எதன் வழியாக இணைந்திருக்கிறோம்?

.....................................................................................................

5. தூய ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது?

.....................................................................................................

6. ஈசாக், ரெபேக்காவுக்குப்பிறந்த குழந்தைகள் யார், யாருக்கு பணிந்திருப்பார்கள் எனச் சொல்லப்பட்டது?

.....................................................................................................

7. "ஆண்டவரே நாங்கள் அறிவித்ததை நம்பியவர்கள் யார்?" என முறையிட்டவர்? .....................................................................................................

8. பழிவாங்குவதும், கைமாறு அளிப்பதும் யாருக்கு உரியது?

.....................................................................................................

9. இறையாட்சி என்பது எதனை அடிப்படையாகக் கொண்டது ?

.....................................................................................................

10. ஆசியா என்பது உரோமை மாநிலங்களுள் ஒன்று. இது எந்த நாட்டின் ஒரு பகுதியாகும்? .....................................................................................................

பெயர் : .........................................................
முகவரி : ......................................................
.........................................................
.........................................................

பங்கு / தொ.பே.இல : ......................................
.........................................................
அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................
.........................................................

அனுப்பவேண்டிய முகவரி :
திருவிவிலியம் கற்போம் - 201
'தொண்டன்"
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

முடிவுத் திகதி
31.03.2020

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



# போட்டி முடிவுகள்!



திருவிவிலியம் கற்போம் - 199 விடைகள்

1. தோல் பதனிடும் சீமோன் என்பவரின் வீட்டில்
2. பேதுரு
3. இடைக் கச்சையைக் கட்டி மிதியடிகளைப் போட்டுக்கொள்ளும்
4. மந்திரவாதி
5. பவுலையும், பர்னபாவையும்
6. லிக்கவோனிய
7. பர்னபா, பவுல்
8. லீதியா
9. ஏதென்சில்
10. ஓர் ஆண்டும் ஆறு மாதம்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:

* **லோ. லபிஷா,**
கனகநகர்,
தம்பிலுவில்.

* **கோ. அனஸ்ரன்,**
6ம் குறுக்கு வீதி,
விநாயகபுரம்,
வாழைச்சேனை.

* **பா. ஆஷறிதா,**
7ம் குறுக்கு,
இருதயபுரம், மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 151 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **ஷனோ சில்வா,**
81/38, நாவலர் வீதி,
கருவேப்பங்கேணி,
மட்டக்களப்பு.


**2ம் பரிசு - 300/=**

* **மா. கனிஸ்,**
41/28, 6ம் குறுக்கு,
மேற்கு இருதயபுரம், மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* **கிஷானி கிறகரி,**
கமலகம் வீதி,
நொச்சிமுனை,
அக்கரைப்பற்று - 8/2.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)





# சீடர்கள் யாருமே அருகில் இல்லை ...

## Why did God chose Simon od Cyrene to help His Son ...

**அ**த்தனை பேர் இருந்தும் எதற்கு இவனுக்கு இப்படி ஓர் வாய்ப்பு. சீரேன் ஊர் சீமோன் இயேசுவுக்கு உதவி செய்தார் என்று. இன்றும் நாம் பேசுகிறோம். இயேசுவுக்கே உதவியா...? அப்படி அவர் என்ன உதவியைத்தான் செய்தார்? அவர் செய்த உதவியை இன்னுமா பேசுகிறார்கள்?

வழமையாக இயேசுதான் எல்லோருக்கும் உதவி செய்வார், வேதனையைக் குறைப்பார், துன்பத்தைப் போக்குவார். ஆனால், இயேசுவுக்கே உதவி தேவைப் பட்ட ஒருநாள் வரலாற்றிலே வந்து போனது. அந்த நாள் இன்றும் நினைத்துப் பேசப்படுகின்றது.

பொதுவாகவே குற்றவாளி அவனுக்குரிய சிலுவையை சுமப்பது தெரிந்த விடயமே! ஆனால், சீரேன் ஊர் சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டு இயேசு வின் சிலுவையை சுமந்துகொண்டு இயேசுவுக்குப் பின் அவனைப் போகச் செய்தார்கள் (லூக்கா 23:26).

எதற்காக வயல்வெளியில் இருந்து வந்த அவரைப் பிடித்து, அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்தார்கள். காரணம் அவ்வளவு துயரம், அத்தனை கசையடி, பாரச் சுமை, வேதனை அத்தனையும் அதிகரிக்க தாங்கமுடியாத அவரை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சீமோன் வந்தார் என்று வேதம் சொல்லுகின்றது. அவர் வந்தாரா அல்லது தன் மகன் துன்பம் பொறுக்காமல் கடவுள் அந்த இடத்திற்கு அவரை அனுப்பினாரா?

He has come not by accident but, அது கடவுளின் திட்டமாக இருந்தது. காரணம், அவர் ஒரு ஐந்து நிமிடம் முந்தியிருந்தால் அல்லது ஐந்து நிமிடங்கள் தாமதித்திருந்தால் இயேசுவுக்கு உதவி செய்கிற வாய்ப்பை அவர் இழந்திருப்பார். ஆனால், அவரைக் கடவுள் தன் மகனுக்கு உதவி தேவைப்படுகின்ற நேரத்திலே அனுப்பி வைக்கின்றார். படைவீரர்கள் கட்டாயப்படுத்த, சிலுவையைத் தோளில் வைத்தபடி இயேசுவுக்குப் பின்னாலே நடந்து அவரின் சீடராக மாறினார் சீமோன்.

இயேசுவுக்கு உதவி செய்த இவனைப் பற்றி வேதம் மூன்று விடயத்தைச் சொல்கிறது.

1. பெயர் சீமோன்
2. சீரேன் ஊர்
3. ரூபஸ், அலக்சாந்தர் என இரண்டு பிள்ளைகள் ....

எதற்காக இந்த இரண்டு பிள்ளைகளையும் நற்செய்தியில், இயேசுவின் பயணத்தில் அறிமுகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கும் இயேசுவின் இறப்புக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? அல்லது தம் தகப்பனான சீமோன் வயல்வெளியில் இருந்து வந்தபோது இவர்களும் அவரோடு வந்தார்களா? தகப்பன் இயேசுவின் சிலுவையை சுமந்தபோது அருகில் நின்று இவர் யாருடைய சிலுவையை சுமக்கிறார், இது யார் சுமந்து வந்த சிலுவை என்ற கேள்விகளுக்குப் பதில் தேடி, அதுவரை சிலுவையோடு பயணித்த இயேசுவை இவர்கள் பார்த்தார்களா அல்லது எனக்கு உதவி செய்தவர் யார் என்று இயேசு சீமோனைப் பார்த்தாரா? என்ற கேள்விகள் எல்லாமே எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

உரோமையர் 16:13 "ஆண்டவரின் பணிக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ரூபுக்கும் அவர் அன்னைக்கும் வாழ்த்து கூறுங்கள்".

தி.ப 19:33, "கூடியிருந்தவர்கள் அலக்சாந்தரிடம் இதுபற்றிப் பேசினார்கள்".

தன் தகப்பன் சிலுவை சுமந்ததைப் பார்த்த பிள்ளைகள் துன்பப்பட்ட இயேசுவைப் பார்த்திருப்பார்கள். இயேசுவைப் பார்த்ததோடு பயணத்தை முடிக்காமல் இயேசுவுக்கெனத் தங்கள் வாழ்க்கையை மாற்றியிருக்க நிறையவே வாய்ப்புக்கள் இருக்கின்றன.

சீடர்கள் என்றால் சிலுவையின் அருகில் இருக்க வேண்டும். துன்பத்திலும் பங்கெடுக்க வேண்டும்.

சீடர்கள் அருகிலில்லை. இவர்கள் சீடர்களாக மாறுகிறார்கள்.

நீங்களும் நானும் என்ன செய்யப் போகிறோம்...?

# தாண்டியடி

# சிலுவை மலையில் ...

## இயேசுவின் பாடுகள்
## பயணத்தில் நாமும் பங்கேற்போம்.

**28.03.2020**

**(சனிக்கிழமை) அன்று**

**காலை 9.00 மணிக்கு**

சிலுவைப்பாதையைத் தொடர்ந்து
எமது மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு கலாநிதி
**ஜோசப் பொன்னையா**
ஆண்டகை தலைமையில்
கூட்டுத் திருப்பலியும்
ஒப்புக்கொடுக்கப்படும்.

**இத் தவக்காலத்தில் .....**

*செப, தவ, ஒறுத்தலோடு*
*எம் வாழ்வின் சிலுவைகளையும்*
*சுமந்து கொண்டு இயேசுவின் சிலுவை*
*அனுபவத்தைப் பெற ஆயத்தமாகுவோம்.*

தொடர்புகட்கு: 0777 161602